



# நாவெளி
# NAAVELI
# නාවෙළි

நாவிதன்வெளி பிரதேச செயலக மாதாந்த மின்னிதழ்

නාවිදන්වෙලි ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලයේ මාසික ඉ - සඟරාව

NAVITHANVELI DIVISIONAL SECRETARIAT MONTHLY E- MAGAZINE

www.navithanveli.ds.gov.lk   ds@navithanveli.ds.gov.lk   DSNavithanveli   0755424333

மலர்: 24 ✦ இதழ்: 56 ✦ 2025ஆம் வருடம் ✦ மார்கழி மாதம் ✦ இருபத்தைந்தாம் திகதி



# உள்ளடக்கம்

04 அபிவிருத்திப் பாதையில்
14 கதைச்சாளரம்
21 குறுக்கெழுத்துப்போட்டி
22 பொருண்மியம்
27 சட்டம் கற்போம்
28 உலக அரசியல்
30 ஆரோக்கியம்
34 அறிவுக்களஞ்சியம்
36 கல்வி
40 பெண்ணியம்
42 மாணவர் அரங்கம்
44 சுற்றுச்சூழல்
46 மானுடம்
48 விளையாட்டும் தேகாரோக்கியமும்
50 மருத்துவமும் நாமும்
52 கவிதைச்சாரல்
54 படலையைத்தேடி

## ஆசிரியரிடமிருந்து...

நாவெளி மலர் - 24 இல் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இருபத்து மூன்று மாதங்களாக மாதாந்த மின்னிதழை வெளியிடுவதற்கு பல்வேறு வழிகளிலும் உதவிய அனைவருக்கும் நன்றியினைத் தெரிவிக்கின்றேன். அந்த வகையில் இவ் வருடத்தின் பன்னிரெண்டாவது மலராக பல்வேறு செய்திகள் மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கிய வகையில் நாவெளி மலர் இருபத்து நான்கு உங்கள் கரங்களில் இன்று தவழ்கின்றது.

இலங்கைத் தேசம் வெள்ளம், மண்சரிவு, சூறாவளி, வரட்சி போன்ற பல்வேறு இயற்கைப் பேரழிவுகளை அடிக்கடி எதிர்கொள்ளும் ஒரு நாடாக மாறி வருகின்றது. இவ்வகைப் பேரழிவுகள் மனித உயிர்கள், சொத்துகள் மற்றும் வாழ்வாதாரங்களில் பெரும் சேதத்தை ஏற்படுத்துகின்றன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக அரசு மற்றும் பல்வேறு தொண்டு அமைப்புகள் இழப்பீடு மற்றும் நிவாரண உதவிகளை வழங்குகின்றன. ஆனால், அந்த உதவிகள் பயனுள்ளவையாகவும் வினைத்திறன் வாய்ந்தவையாகவும் அமையவேண்டுமானால் மக்களின் மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட வேண்டியது அவசியமாகின்றது.

முதலில், இழப்பீடு என்பது நிரந்தரத் தீர்வாக அல்லாமல் தற்காலிக உதவியாகவே பார்க்கப்பட வேண்டும். சிலர் தொடர்ந்து உதவிகளை எதிர்பார்த்து, தங்களது வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப முயற்சிக்காமல் இருக்கும் நிலை காணப்படுகிறது. இவ்வகையான சார்புநிலை மனப்பாங்கு மீட்புச் செயன்முறையை மந்தமாக்கி, அரசின் வளமுகாமைத்துவத்தில் தேவையற்ற சுமையை ஏற்படுத்துகிறது. இழப்பீடு என்பது வாழ்க்கையை மீண்டும் தொடங்க உதவுவதற்கானது என்பதை மக்கள் புரிந்து கொண்டால், அவர்கள் தங்கள் வீடுகளை மீண்டும் கட்டவும், வாழ்வாதாரங்களை மீட்டெடுக்கவும், சமூக வளர்ச்சிக்கு பங்களிக்கவும் ஊக்கமடைவார்கள்.

இரண்டாவதாக, இழப்பீடு கோரும் போது நேர்மையும் பொறுப்புணர்வும் மிக முக்கியமானவை. சில நேரங்களில், உண்மையற்ற தகவல்கள் அல்லது இழப்புகளை மிகைப்படுத்தி கூறுதல் நடைபெறுகிறது. இதனால், உண்மையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கிடைக்க வேண்டிய உதவி குறைகிறது. சமூகப் பொறுப்புணர்வு மற்றும் நெறிமுறைகளை மதிக்கும் மனப்பாங்கு உருவானால், கிடைக்கக்கூடிய குறைந்த வளங்களை உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமாக வழங்க முடியும்.

மேலும், மக்கள் மத்தியில் கோபம் மற்றும் குற்றச்சாட்டு மனநிலைக்குப் பதிலாக நன்றி உணர்வும் ஒத்துழைப்பும் வளர்க்கப்பட வேண்டும். நிருவாகத் தாமதங்கள் அல்லது வரையறைகள் இருப்பினும், அமைதியான மற்றும் ஒத்துழைப்பு மனப்பாங்கு அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையே நல்ல தொடர்பை உருவாக்குகிறது. இது எதிர்கால பேரழிவுகளுக்கான சிறந்த திட்டமிடலுக்கும் வழிவகுக்கிறது. இறுதியாக, இழப்பீட்டைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தும் முன்னோக்குச் சிந்தனை அவசியமாகும். பாதுகாப்பான வீடுகள் கட்டுதல் அல்லது பேரழிவுகளைத் தாங்கக்கூடிய வாழ்வாதாரங்களில் முதலீடு செய்தல் போன்ற செயற்பாடுகள் மூலமாக எதிர்கால அபாயங்களைக் குறைக்க முடியும்.

இயற்கைப் பேரழிவுகளுக்குப் பிறகு இழப்பீடு பெறும் போது இலங்கை மக்களின் மனப்பாங்கு மாற்றமானது நியாயமான பகிர்வு, திறமையான மீட்பு, நாட்டின் தாங்குதிறன் மற்றும் வளர்ச்சி போன்றவற்றிற்கு மிக முக்கியமானதாகும். நேர்மை, பொறுப்புணர்வு, நன்றியுணர்வு மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்த்துக்கொண்டால், இழப்பீடு அதன் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றி, வலிமையான மற்றும் பேரழிவுகளுக்கு எதிரான இலங்கையைக் கட்டியெழுப்ப உதவும்.

தேசத்தை மீளக் கட்டியெழுப்பும் நேர்சிந்தனை கொண்ட இத்தகைய செயற்பாடுகளில் நாம் அனைவரும் கைகோர்ப்போம்!

என்றும் அன்புடன்
ஆசிரியர்.

# ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம் - 2025

நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்கு மேற்படி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் சாளம்பைக்கேணி-05 கிராம சேவகர் பிரிவிற்கு **Sustainable Dairy Livelihoods Empowering Communities Through Milk and Value Added Production** என்ற திட்ட அறிக்கை கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் கிராமிய அபிவிருத்தி பணியகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. இதற்காக கடந்த ஆவணி மாதம் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதி அமைச்சின் ஊடாக மாவட்ட செயலகத்தினால் கிடைக்கப்பெற்றிருந்தது. இத்திட்டத்திற்கு ரூபா **2,649,625.00** நிதி கிடைக்கப்பெற்றிருந்தது. இதற்காக **15** பயனாளிகள் குறித்த கிராம சேவகர் பிரிவிலிருந்து முன்னுரிமையடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். தெரிவு செய்யப்பட்ட குறித்த பயனாளிகளுக்கு முதற் கட்டமாக திட்டத்தினை அமுல்படுத்துவது தொடர்பிலான அறிவூட்டல் சென்ற **2025.09.16** ஆம் திகதி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் கணக்காளரினால் வழங்கப்பட்டிருந்தன.

தெரிவு செய்யப்பட்ட **15** பயனாளிகளில் **10** பேருக்கு சென்ற **2025.10.03**ஆம் திகதி மாடுகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன. இதற்காக பயனாளிகள் தலா ரூபா **100,000.00** பங்களிப்பு செய்ததுடன் அரச நிதியாக ஒவ்வொரு பயனாளிக்கும் ரூபா **150,000.00** வீதம் மொத்தமாக ரூபா **1,500,000.00** செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும் இப்பயனாளிகளுக்கான மாட்டுக் கொட்டில்களை புனர்நிர்மானிப்பதற்கு ரூபா **50,000.00** வீதம் மொத்தமாக ரூபா **500,000.00** அரச நிதி செலவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தின் கீழ் மேலும் **05** பயனாளிகளுக்கு பால் சார்ந்த பெறுமதி சேர் பொருள்கள் உற்பத்தி செய்வதற்கான பயிற்சி வழங்கப்பட்டதுடன் ஒவ்வொரு பயனாளிக்கும் தலா ரூபா **100,000.00** பெறுமதியான இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இதற்கான அரச நிதியாக ரூபா **500,000.00** செலவு செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் **Sustainable Dairy Livelihoods - Empowering Communities Through Milk and Value Added Production** திட்டத்தின் மூலம் குறித்த கிராம சேவகர் பிரிவின் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளை துறை சார்ந்த நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மட்ட உத்தியோகத்தர்கள் தொடர்ந்தேர்ச்சியான கண்காணிப்பு மற்றும் ஆலோசனைகள் வழங்குவதன் மூலமாக இத்திட்டத்தினை நிலைபேறான திட்டமாக வைத்துக் கொள்வதுடன் இதன் பெறுபேறுகள் மூலமாக ஏனைய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் எதிர் காலத்தில் செயற்றிட்டங்களுக்கான அனுமதி கிடைக்க வாய்ப்பாக அமையும். நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இத்திட்டத்தின் மூலம் குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவு வறுமையிலிருந்து மீட்சி பெற்று எதிர்காலத்தில் மக்கள் ஒரு நியமமான வாழ்க்கைத் தரத்துடன் வாழ வழிவகுக்கும் என்பது திண்ணம்.

தொகுப்பு : எம். எச். ஜலிலா
அபிவிருத்தி உத்தியோகத்தர்
மேற்பார்வை மற்றும் வழிகாட்டல் : எம். ஐ. அலியார்







Shot on AWESOME A70







# ஜனாதிபதி நிதியத்தின் சேவைகள் மக்களுக்காக

ஜனாதிபதி நிதியத்தின் (President's Fund) சேவைகள் பிரதேச செயலக மட்டத்திற்கு பரவலாக்கப்பட்டு நிகழ்நிலை முறையில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகளை நேரடியாகப் பிரதேச செயலகங்கள் மூலமாக பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் மூலமாக நாவிதன்வெளி பிரதேச செயலகப்பிரிவின் அன்னமலை - 03 கிராம உத்தியோகத்தர் பிரிவினைச் சேர்ந்த பயனாளியின் இருதய சத்திர சிகிச்சைக்கான ரூ.200,000.00 பெறுமதியான மருத்துவ உதவிக் கொடுப்பனவு கிடைக்கப்பெற்றது. இதற்கான காசோலையை வழங்கி வைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 டிசம்பர் 09ஆம் திகதியன்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், நாவிதன்வெளி பிரதேச செயலக கணக்காளர் திரு. க. றிஸ்வி யஹ்சர், சமூக சேவை உத்தியோகத்தர் திரு. கு. குணரெட்ணம், விடய உத்தியோகத்தர் திருமதி. த. மயூரதா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

-த. மயூரதா

# 'டிட்வா' சூறாவளியால் பாதிப்புற்றவர்களுக்கான கொடுப்பனவு

-எஸ். சிவகுமார்

டிட்வா சூறாவளி மற்றும் வெள்ளத்தினால் இயல்புநிலை இழந்தும், உடைமைகள் பாதிக்கப்பட்டும் காணப்பட்ட மக்களுக்காக அதிமேன்மை தங்கிய சனாதிபதி அவர்களின் வழிகாட்டலுக்கமைவாக ரூ. 25,000 பெறுமதியான உதவித் தொகையானது நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குள் பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 டிசம்பர் 08 மற்றும் 09ஆம் திகதிகளில் வழங்கப்பட்டது.











இந்நிகழ்வில், நாவிதன்வெளி பிரதேச செயலக கணக்காளர் திரு. க. றிஸ்வி யஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. திலகராணி கிருபைராஜா, நிருவாக உத்தியோகத்தர் திரு. ஓ. ஜி. கே. குசுமிந்த, நிருவாக கிராம அலுவலர் திரு. மனோஜ் இந்ரஜித், நிதி உதவியாளர் திருமதி. க. அமிர்தலிங்கம், அனர்த்தப் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சு. சிவகுமார் ஆகியோருடன் கிராம அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

நாவெளி NAAVELI
பிரதேச செயலகம் - நாவிதன்வெளி

ds@navithanveli.ds.gov.lk

வியாழக்கிழமை / மலர் - 24 / இதழ் - 56 / 25 மார்கழி 2025





# பிரஜாசக்தி கருத்திட்டம் தொடர்பான தெளிவூட்டல்

பிரஜாசக்தி தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நாவிதன் வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சமூக அபிவிருத்தி குழுக்களின் பிரதிநிதிகளுக்கான பயிற்சிக் கருத்தரங்கானது பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 டிசம்பர் 09ஆம் திகதியன்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.



நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. திலகராணி கிருபைராஜா அவர்கள் வளவாளராகக் கலந்து கொண்டு பிரஜாசக்தி கருத்திட்டம் தொடர்பாக தெளிவூட்டல்களை வழங்கியதுடன் கிராம அலுவலர் பிரிவுகளுக்கான சமூக அபிவிருத்தி குழுக்களின் தவிசாளர்கள், செயலாளர்கள், இக்குழுக்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.











# "கெப்பகறு டெகுறு" உதவித்திட்டம்





நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களமூடாக (Department of Probation and Child Care Services) வழங்கப்படும் சிறுவர்களுக்கான "கெப்பகறு டெகுறு" உதவித்திட்டம் மூலமாக தெரிவுசெய்யப்பட்ட நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கான உதவிப்பணம் வழங்கி வைக்கும் நிகழ்வு 2025 நவம்பர் 24 ஆம் திகதி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. டி. யாசுகி அவர்களின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறுவர் பெண்கள் அபிவிருத்தி பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் S. சுதர்சினி, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் M. M. சித்தி ரமீசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

-டி. யாசுகி





# அரச உத்தியோகத்தர்களுக்கான மத்தியஸ்தம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு









நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு மற்றும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான மத்தியஸ்தம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கானது பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 டிசம்பர் 11ஆம் திகதியன்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலக மத்தியஸ்த அபிவிருத்தி உத்தியோகத்தர் I. L. M. அன்பாஸ் அவர்களின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் பொலிஸ் உத்தியோகத்தர்கள், சமூர்த்தி... 

-I.L.M.அன்பாஸ்

நாவெளி NAAVELI
பிரதேச செயலகம் - நாவிதன்வெளி
ds@navithanveli.ds.gov.lk
வியாழக்கிழமை / மலர் - 24 / இதழ் - 56 / 25 மார்கழி 2025

# சிறுவர், பெண்கள் மற்றும் உளநலம் சார் கலந்துரையாடல்



2025ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டிற்கான பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி, பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் மற்றும் உளச் சமூக ஒன்றிய கூட்டமானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 டிசம்பர் 09ஆம் திகதி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.



நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. டி. யாசுகி அவர்களின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அரச நிறுவனங்களான சுகாதார வைத்திய பணிமனை, பொலிஸ் நிலையம், கல்முனை சிறுவர் நன்னடத்தை அலுவலகம் போன்றவற்றின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச செயலக சமூக சேவை பிரிவு, சமுர்த்திப் பிரிவு, சிறுவர் பெண்கள் பிரிவு, திட்டமிடல் பிரிவு போன்றவற்றின் உத்தியோகத்தர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களான SWOAD, ADWN போன்றவற்றின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



மேலும் இந்நிகழ்வில் சிறுவர், பெண்கள் மற்றும் உளநலம் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடப் பட்டதுடன் அது தொடர்பிலான தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்விற்காக நிதி அனுசரணையை சிறுவர் நன்னடத்தை திணைக்களம் (Department of Probation and Child Care Services ) வழங்கியிருந்தது.



-டி. யாசுகி

# கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு விசேட போஷாக்கு உணவு முத்திரை வழங்கிவைப்பு








பண்டிகைக் காலத்தினை முன்னிட்டு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சினால் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வழங்கப்படும் ரூ.5000.00 பெறுமதியான விசேட போஷாக்கு உணவு முத்திரையினை நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிலுள்ள பயனாளிகளுக்கு வழங்கிவைக்கும் நிகழ்வு பிரதேச செயலக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஆ. ரஜீவ்காந்த் அவர்களின் ஒருங்கிணைப்பில் பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 டிசம்பர் 16ஆம் திகதியன்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது குறித்த கொடுப்பனவுகளைப் பெறத் தகுதியான பயனாளிகளுக்கு உணவு முத்திரைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

-திரு. ஆ. ரஜீவ்காந்த்

# விவசாய தொகைமதிப்பு எண்ணீட்டாளர்களுக்கான பயிற்சி




-திரு. மு. வரதராசன்

இலங்கை புள்ளிவிபரவியல் திணைக்களமூடாக மேற்கொள்ளப்படும் 2024/25 பயிர்ச்செய்கை ஆண்டுக்கான விவசாயத் தொகைமதிப்பு கணக்கெடுப்பு நடவடிக்கையானது 2024 ஒக்டோபர் 1ஆம் திகதி தொடக்கம் 2025 செப்டம்பர் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியை அடிப்படையாக கொண்டு இடம்பெறவுள்ள நிலையில் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் இந் நடவடிக்கைகளில் எண்ணீட்டாளர்களாக செயற்படவுள்ள கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தெளிவூட்டல் மற்றும் பயிற்சிக் கருத்தரங்கானது 2025 டிசம்பர் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலக புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் திரு. மு. வரதராசன் அவர்களின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வளவாளர்களாக சாய்ந்தமருது பிரதேச செயலக புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் Z. M. ஜாபீர், அம்பாறை மாவட்ட செயலக புள்ளிவிபரவியல் அலுவலக அபிவிருத்தி உத்தியோகத்தர் M. நிப்ராஸ், கல்முனை தமிழ் பிரதேச செயலக புள்ளிவிபரவியல் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் A. L. M. முன்சிப் ஆகியோர் கலந்து கொண்டதுடன் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் குறித்த கணக்கெடுப்பு நடவடிக்கைகளில் மேற்பார்வை உத்தியோகத்தராக செயற்படவுள்ள நாவிதன்வெளி பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் M. I. இஷாக் அவர்களும் டெப்லற் கணினி தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



இலங்கை விவசாயத்துறை கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களை அடையாளம் காண்பதுடன் நிலப்பயன்பாடு, நிலவுடைமை, பயிர் உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, நீர்வாழ் உயிரின வளர்ப்பு, உரம் மற்றும் பூச்சிக் கொல்லிப் பயன்பாடு மற்றும் விவசாய இயந்திர சாதனங்களின் பயன்பாடு பற்றிய அளவு ரீதியான தகவல்களைச் சேகரிப்பதும் அதன் மூலம் எதிர்கால விவசாய அளவீடுகளுக்கு பயனுள்ளதாக அமையும் மாதிரி சட்டகங்களைத் தயாரிப்பதும் இந்நடவடிக்கையின் முக்கிய நோக்கம் ஆகும்.

இக்கணக்கெடுப்பின் மூலம் பெறப்படும் தகவல்கள் நாட்டின் பட்டினியை ஒழிக்கவும், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், நிலைத்திருக்கும் விவசாயத்தை ஊக்குவிக்கவும், கிராமிய வறுமை மற்றும் மற்றும் வள முகாமைத்துவத்தைக் கண்காணிக்கவும், நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDG) மற்றும் குறிகாட்டிகளைத் தொகுக்கவும் பயன்படுத்தப்படுவதுடன் இத்தொகைமதிப்பு இறுதியாக 2013/14 பயிற்செய்கை ஆண்டில் நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புதிதாய் ஒரு விதி

**புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அரச உத்தியோகத்தர்களுக்கான ஆக்கத்திறன் போட்டி 2025இல் பாராட்டுப் பெற்ற சிறுகதை**




"செல்வி சாவித்திரி அவர்கள் நமது நிறுவனத்திற்கு கிடைத்த பெரும் பொக்கிசம். அவரின் அறிவுக் கூர்மையும், திறமையும், ஆளுமையும் நமது நிறுவனத்தை இன்று உச்சத்தில் கொண்டு நிறுத்தியுள்ளது என்று கூறினால் அது மிகையில்லை" என்று சாவித்திரியைப் பற்றி மேடையில் பேசிக்கொண்டே போனார் "குட்வின்" நிறுவனத்தின் உரிமையாளர் திரு சிவசுப்பிரமணியம்.

அரங்கத்தில் ஒரே ஆரவாரம். கைதட்டும் ஓசையும், கூடவே விசில் சத்தமும் ஒலித்தது. சிவசுப்பிரமணியத்திற்கு அருகில் அமர்ந்திருந்த சாவித்திரிக்கு சங்கடமாக இருந்தது. இருக்கையில் நெளிந்தவாறு இருந்தாள். "பிளீஸ், கொஞ்சம் நிறுத்துங்கள்" என்று சொல்ல மனது துடித்தது அவளுக்கு. ஆனால், சபை நாகரிகம் கருதி, பல்லை இறுகக் கடித்து சூழ்நிலையைச் சமாளிக்க முயற்சி செய்தாள்.

சிவசுப்பிரமணியம் இவ்வாறு பேசுவதையும் குறை கூறமுடியாது. அரசாங்க திணைக்களம் ஒன்றில் கடமையாற்றிய சாவித்திரியை ஐந்து வருட காலங்களுக்கான சம்பளமற்ற விடுமுறையினை விண்ணப்பிக்க வைத்து மூழ்கிக் கொண்டிருந்த நிறுவனத்தைத் தூக்கி நிறுத்த தனது நிறுவனத்தில் சேர வைத்தவர்தான் இந்த சிவசுப்பிரமணியம் அவர்கள்.

அவரைப் பொறுத்தவரை சாவித்திரியின் திறமை மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையை அவள் காப்பாற்றி விட்டாள் என்றே சொல்ல வேண்டும். அந்தப் பெருமையினைத் தாங்கிக் கொள்ள முடியாமல் மேடையில் தன்னுடைய சந்தோசத்தினைக் கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தார் சிவசுப்பிரமணியம். அரசாங்க திணைக்களம் ஒன்றில் உயர் பதவி ஒன்றினை வகிக்கும் அலுவலராக இருந்த சாவித்திரி, அந்த அலுவலக ஊழியர்கள் சட்ட விதிகளை மீறி நடந்து கொள்வதையும், அதை ஒரு சாதனை செய்து விட்டதைப் போலப் பெருமை கொள்வதையும் தடுப்பதற்கு அவளிடம் பதவி இருந்தும் அதனைச் செயற்படுத்த முடியாமல் தடுத்துவிடும் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள் சாவித்திரியின் மனதில் ஒரு மாறாத வடுவினை ஏற்படுத்தியிருந்தது.

இதனால் அண்மைக் காலமாக தனது கடமையினைத் திருப்தியாகச் செய்ய முடியாத நிலையில் சாவித்திரி தவித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில்தான் சிவசுப்பிரமணியம் சாவித்திரியை அணுகியிருந்தார்.

சாவித்திரியின் தந்தையும், சிவசுப்பிரமணியமும் நெருங்கிய நண்பர்கள். சாவித்திரியின் தந்தை அரச தொழிலில் ஈடுபட்டவர். தற்போது ஓய்வுநிலையில் இருக்கின்றார். சிவசுப்பிரமணியம் அவளின் தந்தையோடு அரச தொழில் ஒன்றில் இருந்தவர்தான். தனிப்பட்ட வியாபாரத்தில் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தில் அரச தொழிலை விட்டு விட்டு, நிறுவனமொன்றைத் தனியாக ஏற்படுத்திக் கொண்டு செயற்படுத்தி வந்திருந்தார்.

அந்த நிறுவனம் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்ததனால் அதனைத் தூக்கி நிறுத்தவே சாவித்திரியை நிறுவனத்தில் சேர வற்புறுத்தியிருந்தார். இயல்பாகவே திறமையும்,

புத்திசாலித்தனமும் நிறைந்திருந்த சாவித்திரிக்கு அலுவலகத்தில் கடமையாற்றும் சில மேலதிகாரிகளின் செயற்பாடுகள் அவளது ஆளுமையினையும், திறமையினையும் கட்டிப் போட்டிருந்தமை அவளின் மனதை நெருடிக் கொண்டிருந்த விடயங்களாக இருந்தன.

இந்த நிலையில் தான் சிவசுப்பிரமணியம் சாவித்திரியிடம் இந்த உதவியை எதிர்பார்த்துக் கேட்டிருந்தார். சாவித்திரியை வேலைக்கு அழைக்கும் போதே சொல்லிவிட்டார் "இந்த நிறுவனத்தை நிமிர்த்த வேண்டியது உன்னுடைய கடமை. அதற்கு நீ மட்டுமே பொறுப்பு. நீ எடுக்கும் எத்தகைய முடிவுக்கும், உன் செயலுக்கும் தடையாக நான் இருக்க மாட்டேன். எப்போதும் உதவியாய் இருப்பேன்" என்று கூறியிருந்தார்.

அதன்படியே சாவித்திரியிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு மிகவும் நிம்மதியாக வலம் வந்து கொண்டிருந்தார். சிவசுப்பிரமணியம் தனக்கு அளித்த அங்கீகாரத்தின்படி அந்த நிறுவனத்தை நிமிர்த்தி எடுக்கத் தன்னாலான முயற்சிகள் அனைத்தையும் செய்திருந்தாள்.

நிறுவனத்தில் இணைந்து கொண்டதிலிருந்து தான் திட்டமிட்டபடி நிருவாகத்தை நடாத்த ஆரம்பித்தாள் சாவித்திரி. முதலில் ஊழியர்களின் பிரச்சினைகள், நிறுவனத்தின் தேவைகள் போன்றவற்றை ஊழியர்களுடன் கலந்துரையாடி அவர்களை ஒழுங்குபடுத்தினாள். நிறுவனத்தின் தயாரிப்புத் தொடர்பில் கவனம் செலுத்தியதுடன், தயாரிப்புகளின் தரத்தினை உயர்த்திக் கொள்ள துறைசார் வல்லுநர்களின் ஆலோசனையினைப் பெற்றுக் கொண்டாள். அடுத்து வியாபார விடயங்கள் தொடர்பில் ஈடுபட்டுள்ளோரை அழைத்து அவர்கள் எதிர்பார்க்கும் முகவர்களுக்கான தொகைகளைச் சீர்படுத்திக் கொண்டாள். அதுமாத்திரமின்றி, சந்தைப்படுத்தல் விடயங்களை மிகவும் நுணுக்கமாகக் கையாண்டிருந்தாள்.

அத்துடன் நிறுவனத்தின் பணி நேரத்தினையும், ஆளணியினரின் வேலைப் பகுப்பினையும் சரிப்படுத்தினாள். சாவித்திரி



மேற்கொண்ட இத்தகைய அனைத்து நடவடிக்கைகளிலும் தலையிடாமல் இருந்தார் சிவசுப்பிரமணியம். அடுத்து வந்த ஓரிரு வருட காலங்களுக்குள் மாவட்டத்தின் சிறந்த உற்பத்தி நிறுவனம் என்ற பெயரையும், விருதினையும் பெற்றுத் தரும் அளவிற்கு உயர்ந்துள்ளதைக் கண்டு மனம் மகிழ்ந்தார்.

அத்தகைய ஒரு மகிழ்ச்சிகரமான சம்பவத்தினை நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பொருட்டு அனைவரையும் அழைத்து சாவித்திரியைப் பாராட்டிப்பேசி மகிழ்ந்தார். அவர் அவ்வாறு பேசப் பேச மகிழ்ச்சியைவிட பயத்தினையே சாவித்திரி உணர்ந்து கொண்டாள்.

"இந்த மேடையிலேயே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றேன். இனிமேல் சாவித்திரி இந்த நிறுவனத்தின் நிருவாகி மாத்திரமல்ல, இந்த நிறுவனத்தின் குறிப்பிட்ட சில பங்குகளுக்கான பங்குடமையாளராகவும் அவரை ஆக்கப்போகின்றேன்" என்று சிவசுப்பிரமணியம் பேசிக் கொண்டு போகப் போக, அரங்கில் இருந்த அனைவரும் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்து கொண்டிருந்தனர். சாவித்திரிக்கு வியர்த்து விட்டிருந்தது. அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி. இது நல்லதுக்கா? கெட்டதுக்கா?

என்று அவள் மனம் கேள்வி கேட்க ஆரம்பித்திருந்தது. எழுந்து மறுப்புச் சொல்ல மனது துடித்தது சாவித்திரிக்கு. அவ்வாறு சொல்வது அவருக்கு அந்த இடத்தில் மரியாதைக் குறைவாக இருக்கும் என்று எண்ணி மௌனம் காத்துக் கொண்டாள். ஏனென்றால், அவர் நிறுவனத்தின் தலைவர் மாத்திரமல்ல. தனது தந்தையின் நெருங்கிய நண்பருங்கூட.



அன்றைய தினம் ஒருமாதிரியாக நிகழ்வு நிறைவு பெற்றதும், தனது கடமைகளை முடித்துவிட்டு வீடு வந்து சேர்ந்தாள். வீட்டுக்கு வந்த சாவித்திரியைக் கண்டதும் அவள் தாய் தேநீர் கலந்து கொண்டு வந்தாள். அதனை வாங்கிப் பருகியவாறு தந்தையிடம் அலுவலகத்தில் நடந்த விடயங்களைப் பரிமாறிக் கொண்டாள். இடையிடையே தந்தை கேட்ட கேள்விகளும் சாவித்திரியை ஊக்கப்படுத்தியது. இருவரது உரையாடலும் சுவாரசியமாகப் போவதைப் பார்த்துவிட்டு தனக்குள்ளே பெருமைப்பட்டுக் கொண்டாள் சாவித்திரியின் தாய்.

பாராட்டு நிகழ்வு நடைபெற்று ஒரு வாரம் கடந்திருந்தது. சிவசுப்பிரமணியம் மேடையில் சொன்னது போலவே சாவித்திரியைப் பங்குடமையாளராக்கிக் கொள்ள சட்டபூர்வமான ஆவணங்களை ஏற்பாடு செய்து விட்டிருந்தார். சாவித்திரி பிடிகொடுக்காது "பிளீஸ் சேர். இது மிகவும் அதிகமான விடயம். நான் செய்யும் கடமைக்காக நல்ல சம்பளம் கிடைக்கிறது. அதைவிட எனக்கு வேறு ஒன்றும் தேவையில்லை. இதற்கு மேல் நான் ஒன்றும் எதிர்பார்க்கவில்லை. விழா முடிந்த அன்றே உங்களிடம் என் அபிப்பிராயத்தினைச் சொல்லிவிட்டேன் சேர்" எனக் கூறிவிட்டு அவ்விடத்தினை விட்டு நகர்ந்தாள் சாவித்திரி. இதைக்கேட்டதும் சிவசுப்பிரமணியத்தின் முகம் சற்று வாடிப்போனது. "ஏனிந்தப் பெண் இப்படிச் சொல்கிறாள். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள ஏன் தயங்குகின்றாள்" எனத் தனக்குள்ளே கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்தும் சிவசுப்பிரமணியம் சாவித்திரியை விட்டபாடில்லை. மறுநாளே ஒரு ஒப்பந்தப் பத்திரம் ஒன்றைக் கொண்டுவந்து, சாவித்திரியிடம் கையெழுத்திடுமாறு கேட்டார். சாவித்திரியும் அதனை வாங்கி வாசித்துவிட்டு, "கொஞ்சக் காலம் போகட்டும் சேர்" என்று கூறி அந்த ஒப்பந்தப் பத்திரத்தை அவரிடமே கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டாள்.

நாட்கள் மெல்ல நகர்ந்து போய்கொண்டிருந்தது. சாவித்திரியும் தனக்குப் பணிக்கப்பட்ட கடமையினை எந்தத் தடையுமின்றி செவ்வனே ஆற்றிக் கொண்டிருந்தாள். வருடங்களும் நான்கு முடிந்து போயிற்று. அதற்குள் பல விருதுகள், பாராட்டு வைபவங்கள், அந்நிய நிறுவனங்களின் தொடர்புகள் என்று சாவித்திரி பல இடங்களிலும் பிரசித்தமாகிவிட்டாள்.

இவ்வாறான ஒரு விருது வழங்கல் நிகழ்வொன்றில் சாவித்திரி கலந்து கொண்டிருந்தபோது தன்னை யாரோ ஒருவர் பார்ப்பது போல உணர்ந்தாள். தன்னை யார் பார்ப்பது என்று அறிந்து கொள்ள, சுற்றிவரப் பார்த்துக் கொண்டாள். கொஞ்சம் அருகில் இருந்தவரின் கை சற்று உயர்ந்து பணிந்தது. இதன்போது அவர் வாயிலிருந்து "ஹாய்" என்று கூறுவதும் புரிந்தது. அதனை ஒரு புன்முறுவலுடன் ஏற்றுக் கொண்டு முகத்தினை அரங்கைப் பார்த்தபடியே வைத்துக் கொண்டாள். அவர் வேறு யாருமல்ல. இதுவரை அந்தத் துறையில் தேசிய மட்டத்தில் முதன்மை பெற்றுத் திகழ்ந்த ஒரு நிறுவனத்தின் உரிமையாளர்.

நிகழ்வின் முடிவில் சிவசுப்பிரமணியத்தின் குட்வின் நிறுவனத்திற்கு தேசிய விருது கிடைத்ததை மகிழ்வுடன் அறிவித்தனர். அதனைப் பெற்று வந்த சிவசுப்பிரமணியம் சாவித்திரியின் கைகளில் கொடுத்து அகம் மகிழ்ந்தார். தொடர்ந்து தேநீர் உபசரணைக்காக அனைவரும் ஒன்று கூடினர். அப்போது, இதுவரை முதலிடத்தில் திகழ்ந்த நிறுவனத்தின் உரிமையாளர் சாவித்திரியை நெருங்கி பேச்சுக் கொடுத்தார்.

பேச்சின் நடுவே தங்கள் நிறுவனத்தில் இணையும் படியும், இதைவிட நல்ல சம்பளமும், வெகுமதிகளும் தருவதற்கு ஏற்பாடு செய்கின்றேன் என்று சாவித்திரியை அழைத்தார். அத்தகைய சந்தர்ப்பத்தில் சாவித்திரியால் உடனடியாக மறுப்புச் சொல்ல முடியவில்லை. தனது திறமையைப் பார்த்து அவ்வாறு கேட்கிறாரென எண்ணிக்கொண்டு நாசூக்காக் கதைத்து விலகிச்சென்றாள்.




நிகழ்வு முடிந்து வீடு செல்ல முற்பட்ட போது, சிவசுப்பிரமணியத்தினைத் தேடிப்பார்த்தாள். அங்கு அவர் இல்லை. விருது வழங்கிய ஏற்பாட்டுக் குழுவினருடன் அளவளாவிக் கொண்டிருந்தார். அவரைத் தொந்தரவு செய்ய மனமில்லாது, அவ்விடத்தினை விட்டு அகன்ற போது, அந்த நிறுவனத்தின் உரிமையாளர் காரை அவளருகில் கொண்டு நிறுத்தி ஏறும்படி கூறினார். காரினுள் ஒரு பெண் இருப்பதைக் கண்டு திருப்தியுற்றவளாக காருக்குள் ஏறுவதற்கு எத்தனித்த போது, “சாவித்திரி, இங்க வா” என்ற சிவசுப்பிரமணியத்தின் குரல் கேட்டது. தன்னைச் சுதாகரித்துக் கொண்டு நிறுவன உரிமையாளரிடம் நன்றி சொல்லிவிட்டு சிவசுப்பிரமணியத்தின் காரில் ஏறிக் கொண்டு தனது பயணத்தைத் தொடர்ந்தாள்.

வீட்டிலிருந்து நிகழ்வு நடைபெற்ற இடம் அதிக தூரம் என்பதனால், அதிக நேரம் கதைப்பதற்கும் அதிக நேரம் மௌனமாக இருப்பதற்கும் சிவசுப்பிரமணியத்திற்கும், சாவித்திரிக்கும் நேரம் கிடைத்திருந்தது. இடையிடையே நிகழ்வு பற்றியும், அங்கு நடந்தவை பற்றியும் தாங்கள் புரிந்து கொண்டதைப் பரிமாறிக் கொண்டனர். அத்தகைய சந்தர்ப்பத்தில் அந்த நிறுவன உரிமையாளர் தன்னை அங்கு வேலைக்கு வருமாறு அழைத்த விடயத்தையும் அவர் கூறிய விபரங்களையும் சாவித்திரி கூறினாள்.

சாவித்திரி கூறிய எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, சிவசுப்பிரமணியம் அவளைப் பார்த்துக் கேட்டார் "நீ என்ன முடிவு எடுக்கப் போகின்றாய்” என்று. அதற்கு அவள் புன்முறுவலுடன் "யோசித்துவிட்டுச் சொல்கின்றேன் சேர்” என்று கூறவும், அவளது வீடு வரவும் சரியாக இருந்தது. நாளை பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் புன்னகைத்தவாறே இருவரும் விடைபெற்றுக் கொண்டனர். அன்று நடந்த நிகழ்வுகளை சாவித்திரி தந்தையிடம் ஒன்று விடாமல் கூறினாள். அமைதியாகக் கேட்டுவிட்டு, சாவித்திரியையே முடிவு எடுக்கும்படி கூறினார் அவளின் தந்தை.

நள்ளிரவு கடக்கும்வரை சாவித்திரிக்கு நித்திரை வரமறுத்தது. தனது கடந்தகால வாழ்க்கையை எண்ணிப் பார்த்தாள். உயர்தரம் படித்து முடித்ததும் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. கணிதத் துறையைத் தெரிவுசெய்து படித்திருந்தாலும் முகாமைத்துவ துறைசார் தொழில் ஒன்று பற்றிய எண்ணங்களே அவளின் மனதை நிறைத்து இருந்தது. வேலை பற்றிய விடயத்திலும் முகாமைத்துவம் சார்ந்த வேலை ஒன்றையே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டிருந்தாள்.

அவளின் பல்கலைக்கழகக் கல்வியும் முடிவடைந்திருந்தது. இரண்டாம் வகுப்பு மேல் பிரிவில் அவள் சித்தி பெற்றிருந்தாள். பட்டமளிப்பு விழாவில் தன் பெற்றோருடன் மகிழ்ச்சியாகக் கலந்து கொண்டிருந்தாள். எதிர்காலம் பற்றிய பல கனவுகள் நிறைந்திருந்தாலும் வேலை ஒன்றைப் பெற்றுக்கொள்வது குதிரைக்கொம்பாக இருந்தது. செய்தித்தாள்கள், அரச வர்த்தமானிகள் என்று வேலைகளுக்கான வெற்றிடங்களைத் தேடுவதிலும், அவற்றிற்கு விண்ணப்பிப்பதிலும்,

நேர்முகத்தேர்வுகளுக்கு செல்வதிலும் காலங்கள் கடந்ததே தவிர, வேலை எதுவும் கிடைத்தபாடில்லை சாவித்திரிக்கு.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் சாவித்திரியின் தாய் திடீரென நோய்வாயப்பட்டாள். சாவித்திரியின் தந்தையும் ஓய்வு பெற்றிருந்ததால் அவரது பென்சன் பணத்தைக் கொண்டு மருத்துவச் செலவுகளைச் சமாளிப்பது மிகக் கடினமாயிருந்தது. தனது குடும்பத்திற்கு தேவையொன்று உள்ள சந்தர்ப்பத்தில் தன்னால் உதவ முடியாத நிலைகண்டு சாவித்திரி மிகவும் வருந்தினாள். அந்தச் சந்தர்ப்பத்தில்தான் சாவித்திரியின் ஊரைச் சேர்ந்த ஒருவர் கிராமத்தை அண்டியிருந்த நகரில் இலத்திரனியல் பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனமொன்றின் கிளையில் முகாமையாளராக வேலை செய்து கொண்டிருந்ததையும், அந்த நிறுவனத்தில் விற்பனைச் செயற்பாடுகளுக்கு பணி வெற்றிடமொன்று இருப்பதையும் அறிந்தாள். தனது சுயவிபரத்தினைக் கொடுத்து அந்த நிறுவனத்தில் வெற்றிடமாக இருந்த பதவியைப் பெற்றுக்கொண்டாள். பலத்த நம்பிக்கையுடன் முதல்நாள் வேலைக்குச் சென்றவளுக்கு பெரிய ஏமாற்றம் காத்திருந்தது. அந்த நிறுவனத்தில் விற்பனைப் பிரிவில் ஏலவே கடமையாற்றிக் கொண்டிருந்த சர்மிளா இவளை ஒரு அற்பப் பூச்சியாகவே பார்த்தாள். முகாமையாளர் இருக்கும் போது நல்லவளாகவும், அவர் இல்லாத சந்தர்ப்பத்தில் சாவித்திரிக்கு கஸ்ரங்களையும் கொடுத்து வந்தாள். சர்மிளா சொல்லும் விடயங்களையே முகாமையாளர் ஏற்று நடப்பதும், முகாமையாளரின் தனிப்பட்ட விடயங்களில் செல்வாக்கு செலுத்துவதும், நிறுவனத்தின் விற்பனை தொடர்பில் கழிவுகளை சீர்செய்து தனிப்பட்ட இலாபம் ஈட்டுவதும் சாவித்திரிக்கு கவலையாக இருந்தது. அத்துடன், வெளியில் நல்ல மனிதராகக் காட்டிக்கொண்டு, சர்மிளாவின் செயற்பாடுகளுக்கு முகாமையாளர் உடந்தையாக இருந்தமை அவளுக்கு அருவருப்பாகவிருந்தது.

தனது செயற்பாடுகளுக்கு சாவித்திரியின் எதிர்ப்புள்ளது என்பதைக் அறிந்து கொண்ட சர்மிளா சாவித்திரியை நிறுவனத்தைவிட்டு அனுப்ப பல்வேறு உபாயங்களைக் கையாண்டாள். சாவித்திரியும் தன்னைப் போலவே முகாமையாளரின் ஆசைகளுக்கு இணங்கிப்போய்விட்டால், அந்த நிறுவனத்தில் தனக்கிருக்கும் செல்வாக்கு இல்லாது போய்விடுமென்ற பயம் சர்மிளாவுக்கு.

சாவித்திரி இயற்கையாகவே அழகானவள்தான். முகாமையாளரின் பல்வேறு விதமான அணுகுமுறைகளைச் சட்டெனப் புரிந்து கொண்டாள். அதற்கேற்றாற்போல தன்னைப் பாதுகாத்துக்கொண்டாள். சாவித்திரிக்கு வேலையை விட்டுவிட மனது துடித்தாலும் வீட்டு நிலைமைகளைக் கருத்திற்கொண்டு சாதுரியமாக நடந்து கொண்டாள். எல்லாநாளும் நாம் நினைத்தபடியா நடக்கிறது. ஒருநாள் முகாமையாளர் சாவித்திரியிடம் எல்லைமீறி நடக்க முற்பட்டதனால் விடயம் விபரீதமாகப்போனது. அப்போது சாவித்திரி கோபங்கொண்டு தற்காத்துக்கொள்ள முனைந்தபோது முகாமையாளர் நிலைதடுமாறி விழவும் அவரை சர்மிளா தாங்கிப்பிடிக்கவும் சரியாக இருந்தது. ஏதோ சாவித்திரிதான் தவறு செய்தாள் என்ற போர்வையில் அவளைப்பார்த்து கதைகளைச்சோடித்து வாய்க்கு வந்ததையெல்லாம் கொட்டினாள் சர்மிளா.

சாவித்திரி தன்னிலை புரிந்தவளாக வேலையைத் தூக்கியெறிந்துவிட்டு வீடு சென்றாள். தந்தையிடம் நடந்ததைக்கூறி மனவேதனைப்பட்டாள். மகளின் கதைகளைக் கேட்கக்கேட்க அவருக்கும் சொல்வதறியாது போயிற்று. மெல்லக்கண்கள் செருக மயங்கி வீழ்ந்தார். அன்றிலிருந்து அம்மாவைப் போலவே அவருக்கும் நோய் தொற்றிக்கொண்டது.

எல்லாப் பிரச்சினையும் ஒன்று சேர்ந்து வந்ததினால் சாவித்திரி உடைந்து போனாள். தன்னைத்தானே தேற்றிக்கொண்டு அடுத்து என்ன செய்யலாம் என்று சிந்திக்கத் தொடங்கினாள். படித்த கல்வியைப் பயன்படுத்தி, உயர்தர மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையில் வகுப்பு எடுக்கத் தொடங்கினாள். பல இடங்களுக்கும் சைக்கிளில் சென்று வகுப்பு எடுப்பதால் சிலரது கேலிப்பேச்சுக்களுக்கு ஆளாகினாலும், அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வீட்டின் சுமையைக் குறைக்க முடிகின்றதேயென நினைத்து அந்த வலிகளையும் தாங்கிக்கொண்டாள்.

இவ்வாறு சாவித்திரி அலைந்துதிரிந்த ஒரு சந்தர்ப்பத்தில்தான்

தற்செயலாக தனக்கு கல்வி கற்பித்த ஆசிரியரைக் கண்டாள். அவரைக் கண்டதும் பாடசாலை வாழ்க்கை கண்முன்னே வந்துபோனது சாவித்திரிக்கு. இருவரும் பேசிக்கொண்டனர். போட்டிப் பரீட்சைகள் பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் ஆசிரியர் கூறிய கருத்துக்களைக் கேட்டு ஆறுதல் அடைந்தவளாக, அவற்றைச் செயலில் காட்டும் உத்வேகத்துடன் ஆசிரியரிடமிருந்து விடைபெற்றுச் சென்றாள்.

பிரத்தியேக வகுப்புகள் எடுப்பது, போட்டிப்பரீட்சைகளுக்கு தயாராகுவது, நோயுற்ற பெற்றோரைக் கவனிப்பது என்று மிகக்கடினமான வாழ்க்கைப் போராட்டம் ஒன்றினை சாவித்திரி எதிர்கொண்டிருந்தாள். அவள் நினைத்தவாறு பரீட்சையும் வந்தது, அதில் தேர்ச்சி பெற்று உயரிய பதவி ஒன்றையும் பெற்றுக் கொண்டாள். இதனைத் தனக்கு அறிவுரை வழங்கிய ஆசிரியரைச் சந்தித்துக்கூறி அவரிடம் ஆசி பெற்றுக்கொண்டாள். அவரும் அவளுக்கு நல்லாசிகூறி மகிழ்ந்தார். உனக்கு கிடைத்த இந்தப் பதவியால் ஆயிரக்கணக்கான மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்று வாழ்த்தினார்.

சாவித்திரியும் தனது கடமையில் கண்ணாயிருந்தாள். தனக்குக் கிடைத்த பதவி மூலம் மக்களுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றினாள். கடமையின் நடுவே நோய்வாய்ப்பட்டிருந்த பெற்றோரையும் குணமாக்கியதுடன் அவர்களைச் சந்தோசமாகவும் பார்த்துக் கொண்டாள்.

நாள்கள் மெல்ல நகர்ந்தன. அந்தச் சூழ்நிலையில்தான் அவளின் கடமைக்கு பங்கம் ஏற்படும் வகையில் சில வேலைகள் அலுவலகத்தில் அரங்கேறி இருந்தன. சட்டத்திற்குப் புறம்பாக நடப்பவர்களுடன் சில பிரமுகர்கள் தங்கள் செல்வாக்கினைப் பயன்படுத்தி அரச கட்டமைப்பினை குழப்பிக் கொண்டிருந்தனர். சில தீய செயல்களைத் தடுப்பதற்கு அதிகாரம் இருந்தும் அதனை சாவித்திரியால் தடுக்க முடியவில்லை. அதைவிடவும் தொழிற்சங்கங்களின் செல்வாக்கு பெரிய அச்சுறுத்தலாக இருந்தது அவளுக்கு.

மனமுடைந்து போனாள் சாவித்திரி. தனது அரச கடமையினை எண்ணிக் கலக்கமடைந்தாள். அவளுக்கு சற்று ஓய்வு தேவை என்று அவள் மனது எண்ணிய நேரத்தில்தான் சிவசுப்பிரமணியம் தானாக வந்து அவளிடம் உதவி கோரியிருந்தார். அத்தகைய ஒரு பொறுப்பை ஏற்றுக் கொண்டு தனது தலைமைத்துவத்தையும், திறமையையும் வெளிக்காட்டிய சாவித்திரிக்கு இப்போதும் ஒரு கலக்கம். நித்திரைக்குச் சென்று பலமணி நேரமாகியும் தான் இன்னும் தூங்காமல் பழைய நினைவுகளில் மூழ்கித் தவிப்பதை உணர்ந்தாள். மெல்ல எழுந்து நீரை அருந்திவிட்டு மீண்டும் தூங்க நினைத்தாள்.

தான் கஸ்ரப்பட்டு படித்து, ஒரு அரச தொழிலையும் பெற்றுக் கொண்டது எதற்காக? அதனால்தானே எனது ஆரம்பகாலக் கஸ்ரங்கள் கொஞ்சம் விலகிப் போயிருந்தன. பொதுமக்களுக்கும் நேர்மையாக வேலை செய்ய முடிந்தது. ஒவ்வொரு செயலுக்கும் எதிரான செயல்கள் இந்த சமூகத்தில் இருக்கும் என்பது யதார்த்தம்தானே. அரச சேவை என்று வரும்போது சமூகத்தில் இருக்கும் செல்வாக்கு மிக்கவர்களின் தொல்லைகள் வரும் போகும். அதற்காக எதைத் தவிர்த்து எதை அடைவது. இப்படி எல்லாரும் நினைத்தால் மக்களுக்கு சேவையாற்றக்கூடிய மேலதிகாரிகளுக்கு எங்கே போவது? பெருமூச்சொன்று வந்துபோனது அவளுக்கு.

சிவசுப்பிரமணியத்தின் குட் வின் நிறுவனத்தில் தொடர்ந்தும் வேலை செய்வதா? அல்லது புதிதாக அறிமுகமான நபரின் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்வதா? என்று சாவித்திரி மீண்டும் குழம்பிப் போனாள். இரண்டு நிறுவனத்திலும் நல்ல மதிப்பு, மரியாதை, எதிர்பார்த்ததைவிட அதிக சம்பளம், வசதிகள் என்று எல்லாம் கிடைக்கும் என்று சாவித்திரிக்கு அவள் மனது எட்டிப்பார்த்துக் கதை சொன்னது. சாவித்திரிக்கு ஏதோ தெளிவடைந்தது போலிருந்தது. அவளின் கண்கள் அயர்ந்தது, அவளுக்கே தெரியாது.

மறுநாள் காலை குட்வின் நிறுவனம் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. சாவித்திரி சிவசுப்பிரமணியத்தினைப் பார்க்க அவரது அறைக்குள் சென்றிருந்தாள். சாவித்திரியை இருக்கையில் அமரச் சொல்லியவாறே அவள் முகத்தைப் பார்த்தார் சிவசுப்பிரமணியம். அவள் முகத்தில் ஒரு தெளிவு தெரிந்ததை அவர் அவதானித்தார். அவரைப் பார்த்தவாறே

கையில் இருந்த கடிதத்தை அவரிடம் நீட்டினாள். கடிதத்தை வாங்கி வாசித்த சிவசுப்பிரமணியம் அதிர்ந்தே போனார்.

"திடீரென வேலையை விட்டுப் போவதற்கு என்ன காரணம். ஏதும் பிரச்சினையா? நான்தானே உனக்கு நிறுவனத்தில கூடப் பங்கு தரத் தயாராக இருக்கிறேனே, சாவித்திரி" எனத் தன் மகளிடம் கெஞ்சுவது போலக் கேட்டார். அவரின் குரல் தளர்ந்து போயிருந்தது. அதனை உணர்ந்தவளாக, சிவசுப்பிரமணியத்தைக் கனிவாகப் பார்த்துவிட்டு பேசத் தெடங்கினாள் சாவித்திரி.

"சேர். உண்மையில் அரச சேவையில் இருந்த எனக்கு இப்படி ஒரு சந்தர்ப்பத்த நீங்கதான் ஏற்படுத்தி தந்தீங்க. அதுக்கு நான் உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். என்ர திறமைய மதிச்சி உங்கட நிறுவனத்தில வேல தந்தீங்க. அதுக்கு ஏற்ற மாதிரி என்ர முழுக் கவனத்தையும் செலுத்தி உங்கட குட்வின் நிறுவனத்த முதல்தர நிறுவனமாக மாற்றுறதுக்கு என்னாலான முயற்சிகள செய்திருக்கன். இப்போதைக்கு இது போதும் என்று தோணுது. அதனால நான் இந்த வேலைய விடுறதா முடிவு எடுத்திற்றன்" என்று அமைதியாகக் கூறினாள். அவள் குரல் தெளிவாக இருந்தது.

சாவித்திரி அவ்வாறு கூறிய பின்பு சிவசுப்பிரமணியத்தினால் மறுத்துக் கதைக்க முடியவில்லை. உடனே பணியாளர் ஒருவரை அழைத்து சகல உத்தியோகத்தர்களையும் அழைக்கும்படி கூறினார். அடுத்த கணமே சகலரும் ஒன்று கூடினர். அனைவரிடமும் சாவித்திரியின் முடிவு பற்றி சிவசுப்பிரமணியம் எடுத்துரைத்தார். எல்லோர் முகத்திலும் சோகம் தாண்டவமாடியது. சாவித்திரி நிறுவனத்தை விட்டுச் செல்வதைத் தடுப்பதற்கு ஆளாளுக்கு புத்தி சொன்னார்கள். எதையும் அவள் மனதில் ஏற்றிக்கொள்ளவில்லை. இறுதியில் எல்லோரிடமும் விடைபெற்று குட்வின் நிறுவனத்தின் பெயர்ப் பலகையைப் பெருமிதமாய்ப் பார்த்துவிட்டு சிவசுப்பிரமணியத்தின் நிறுவனத்தை விட்டு வெளியேறினாள். மிடுக்காகச் சாவித்திரி வெளியேறிச் சென்றதைப் பார்த்துக் கொண்டிருந்த சிவசுப்பிரமணியம் மனதார அவளை வாழ்த்தினாலும், மனதின் ஓரமாய் கனமான வலியுடன் தனது இருக்கையில் மெல்ல அமர்ந்து கொண்டார். இந்த நிறுவனத்தை விட்டுவிட்டு, அந்த முதல்தர நிறுவனத்தில் வேலையைப் பொறுப்பேற்கப் போகின்றாளா? என்ற கேள்வியும் அவருக்கு கூடவே எழுந்தது. எனினும் தன்னைத்தானே தேற்றிக் கொண்டார், தன் நண்பனின் மகள் அப்படியானவள் அல்ல என்று எண்ணியவராய்.

அலுவலகம் விட்டு வெளியேறியவளை ஏற்றிச்செல்ல கார் தயாராக இருந்த போதும் அதனை மறுத்துவிட்டு இலாவகமாக கைகளை வீசியவாறே வீதியில் நடக்கத் தொடங்கினாள். வானத்தை அண்ணாந்து பார்த்தாள். வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. ஆனால், அவள் மனமோ வெள்ளையாய், தூய்மையாய் இருப்பதாய் உணர்ந்தாள். வானத்தின் கருமேகங்கள் துளித்துளியாய் வீழ்த்திய மழைத்துளிகளை ஆகாயத்தைப் பார்த்து முகத்தில் வாங்கிக்கொண்டாள். அவள் மனது, அவளுக்கு முன் பறவையாய்ப் பறந்து தன் இருப்பிடத்திற்கு சென்றது.

ஆம், சாவித்திரி தான், தனியார் நிறுவனத்தில் காட்டிய திறமையினை அரச சேவையில் காட்டுவதற்காகவும், அங்குள்ள சவால்களை முறியடித்து, அரச சேவையைப் பெறுமதிமிக்க ஒரு சேவையாக மாற்றிக் காட்டும் நோக்கில் மீண்டும் தான் கடமையாற்றிய அரச சேவை நிலையத்தினை நோக்கி விரைந்து சென்றாள் சாவித்திரி.

"முற்றும்"

**- திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன்**



# குறுக்கெழுத்துப் போட்டி இல.23 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 மு | 2 க | த் | 3 து | 4 வா | 5 ர | ம் | ■ |
| 6 தி | ல் | ■ | 7 ப் | க | பி | ■ | 8 ம் |
| ர் | ■ | 9 க | ப | ட | ம் | ■ | க |
| 10 வு | 11 தீ | ■ | 12 ர | ம் | ம | ■ | ல |
| ■ | 13 ர் | 14 தே | வு | ■ | 15 ன் | 16 வி | க |
| 17 மு | த் | தி | ■ | 18 ஓ | ■ | ட் | ■ |
| 19 லை | த | ■ | ■ | 20 ம் | 21 க | டி | 22 ப |
| 23 த | ம் | ப | தி | ■ | 24 வி | ல் | லி |

## வெற்றியாளர்கள்

1ஆம் இடம்:

திருமதி.
ப. மணிவண்ணன்
அன்னமலை - 01

RELOAD

1st 200/=
2nd 150/=
3rd 100/=



# குறுக்கெழுத்துப் போட்டி இல – 24

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | 4 | ■ | 5 |
| 6 | | ■ | | ■ | 7 | 8 | |
| | ■ | 9 | | 10 | | | ■ |
| 11 | | | ■ | | ■ | 12 | 13 |
| | ■ | ■ | ■ | 14 | | | |
| 15 | 16 | 17 | | ■ | ■ | ■ | |
| 18 | | | ■ | 19 | 20 | 21 | |
| ■ | 22 | | | ■ | 23 | | ■ |

## இடமிருந்து வலம்

01. தகவல் தொடர்பு சாதனம் ஒன்று.
06. கடல் என்பதன் ஒத்த சொல்.
07. நீர்நிலை ஒன்று (திரும்பி).
09. ஏக்கம் கலந்த கவலை என்றும் சொல்லலாம்.
11. முகத்தின் ஒரு பகுதி.
12. இது வந்தால் பத்தும் பறந்துவிடுமாம்.
14. எல்லோரும் இதற்கு கட்டுப்படல் வேண்டும்.
15. நவரத்தினங்களில் ஒன்று.
18. செய்யும் தீமையெல்லாம் இந்தப்பக்கம் சேருமாம் (திரும்பி).
19. போர்க் கருவி என்றும் சொல்லலாம்.
22. நோய்களில் ஒரு வகை.
23. ஓடுமீன் ஓட, இப்படி இருக்குமாம் கொக்கு.

## மேலிருந்து கீழ்

01. அறிவியல் அறிவைப் பயன்படுத்துவது என்றும் சொல்லலாம்.
02. தொழிற்சாலையைக் குறிக்கும் (தலைகீழ்).
03. ஒருவகை அன்பு (குழம்பி).
04. இறுதி என்றும் பொருள்படும் (குழம்பி).
05. மழைக்கும், வெயிலுக்கும் தேவையான ஒன்று (தலைகீழ்).
08. படித்தால் இது கிடைக்கும் (குழம்பி).
09. இது போல் தழைத்து என்பர் பாரம்பரிய தமிழர்.
10. இந்துக்களின் வாழ்வில் இதற்கு முக்கிய இடம் உண்டு (குழம்பி).
13. இராசிகளில் ஒன்று.
16. தேரோடு தொடர்புடையது.
17. எல்லோரும் விரும்பும் ஒரு வயதுப் பருவம் (குழம்பி).
20. இது இல்லாமல் உயிர் வாழ முடியாது (தலைகீழ்).
21. இது எடுத்தவர்கள் எல்லாம் தண்டல்காரர்கள் இல்லை.

**இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2025.01.15ஆம் திகதி பி.ப. 04.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்.**

# Clean Sri Lanka தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 2021 – 2024 ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவித்திட்டம் சம்பந்தமான மீள்பார்வை மற்றும் தாக்க விளைவு

கடந்த ஐப்பசி மாத மின்னியல் நாவெளி சஞ்சிகையில் மேற்படி விடயம் தொடர்பாக கட்டம் 01 இல் 15 கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து ஆய்வு செய்யப்பட்ட தகவல்களை அடிப்படையாக வைத்து பிரசுரிக்கப்பட்டது. தற்போது இம்மாத மின்னியல் சஞ்சிகை கட்டம் 02 ஆக 30.11.2025ஆம் ஆண்டு வரைக்குமான பிரதேச செயலக 20 கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாக வைத்து ஆய்வு செய்யப்பட்ட மீள்பார்வை அறிக்கையாக பிரசுரிக்கப்படுகிறது.

மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் 04 ஆண்டுகள் காலப்பகுதியில் துறைசார் அமைச்சுக்கள், நிரல் அமைச்சுக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலமான நிதிப்பங்களிப்புடன் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவி திட்டங்களின் பெறுபேறுகள் அடைவுகளை மதிப்பீடு செய்வதற்காக பிரதேச செயலாளரால் சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோத்தர்கள் மற்றும் அபிவிருத்தி இணைப்பு உத்தியோகத்தர் ஆகிய 03 பேரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

பிரதேச செயலகப்பிரிவிலுள்ள 20 கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து 2021 தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரைக்கும் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவித்திட்டங்கள் தொடர்பாக 2025.11.30ஆம் திகதி வரைக்கும் மீளாய்வு செய்து முடிவுறுத்தப்பட்டுள்ளன. இக்குறிக்கோளை அடைதற்காக பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலுக்கமைய தயாரிக்கப்பட்ட வினாக் கொத்து மூலமாக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களை கொத்தணிக் குழுக்களாகப் பிரித்து பயனாளிகளிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டன.

பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 20 கிராம சேவகர் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளை நோக்குமிடத்து கீழ் வரும் திட்ட நிதி மூலங்களிலிருந்து வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட 04 ஆண்டு காலப் பகுதிகளுக்கிடையில் சுமார் 360 பயனாளிகளுக்கு ரூபா 24,795,150.00 பெறுமதியான உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 112 பயனாளிகள் தமது வாழ்வாதாரத்தை தொடர்ந்து மேற்கொள்ளாமல் காணப்படுகின்றனர்.248 திட்டங்கள் (பயனாளிகள்) சரியாக மேற்கொள்ளப்பட்டு தற்போது வரைக்கும் நிலைத்திருப்பதுடன், குறிப்பிடத்தக்க வருமானம் பெற்று சிறப்பாக ஜீவனம் நடாத்திக் கொண்டிருக்கிறார்கள் கடந்த 04 வருடங்களில் 248 திட்டங்களுக்கு ரூபா 17,409,750.00 அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி மூலம் ஊடாக செலவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்டு கூறக் கூடிய வகையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக வழங்கப்பட்ட பெண்களை மையமாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட வாழ்வாதார தொழிலான மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு ,சிறுகைத்தொழிலுக்கான உபகரணங்கள் வழங்குதல், ஆடு வளர்ப்பு மற்றும் தையல் தொழில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்கள் இதன் மூலம் வருமானம் பெற்று அவர்களது ஜீவனோபாயத்தை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

| S.NO | Name of Program / Department | No of Project | Amount RS |
|---|---|---|---|
| 01 | Gama Samaga Pilisandara – ( 03 Mn & 04 Mn) | 121 | 7,810,000.00 |
| 02 | PSDG | 7 | 875,000.00 |
| 03 | Provincial Fund | 17 | 620,000.00 |
| 04 | Department of Animal Husbandry | 20 | 620,000.00 |
| 05 | Vithada Resource Centre | 10 | 765,350.00 |
| 06 | Disaster | 1 | 50,000.00 |
| 07 | Small Industrial | 4 | 85,000.00 |
| 08 | CO 19 Project | 14 | 360,000.00 |
| 09 | Foreign Employment | 1 | 50,000.00 |
| 10 | Resettlement | 4 | 250,000.00 |
| 11 | NGO | 140 | 11,244,800.00 |
| 12 | Agriculture Department | 2 | 160,000.00 |
| 13 | Department of Probation | 1 | 30,000.00 |
| 14 | IUVDP | 12 | 1,800,000.00 |
| 15 | Department of fisheries | 1 | 50,000.00 |
| 16 | Office for Reparation | 5 | 25,000.00 |
| | **Total** | **360** | **24,795,150.00** |

தொகுப்பு:
எம்.எச். ஜலிலா, அபிவிருத்தி உத்தியோகத்தர்

மேற்பார்வை மற்றும் வழிகாட்டல்:
எம்.ஐ. அலியார், சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்

# Feasibilities to Manufacture Simple Value-Added Products Using Rice Husk in the Navithanveli Division



In the Navithanveli Division, paddy cultivation occupies a large proportion of agricultural land and rice production plays a central role in the local economy. Along with rice, a substantial amount of rice husk is generated as a by - product during the milling process. Rice husk was often treated as waste and disposed of through open dumping or burning in this area in the past, causing environmental pollution and health hazards. But, nowadays, it is mostly used in brick kilns. However, this by - product holds considerable potential for the manufacture of simple and complex value - added products. Exploring the feasibility of utilizing rice husk in such divisions can contribute to sustainable development, rural industrialization and improved livelihoods.

One of the strongest factors supporting feasibility is the abundant availability of raw material. As this is a paddy-dominated division, rice mills operate continuously throughout the year, especially during harvesting seasons. As a result, rice husk is produced in large quantities and is readily available at low cost. Since it is a by - product, its

use does not interfere with food production or food security. This consistent and inexpensive supply of raw material makes rice husk an ideal input for small-and medium-scale value-added manufacturing.

Another important feasibility factor is the low technological and financial requirements associaed with husk - based industries. Many simple value-added products can be produced using basic machinery and uncomplicated production processes. Examples include rice husk briquettes and pellets for fuel, compost and organic fertilizer, animal bedding material, particle boards and husk ash products. These production units can be established with modest capital investment, making them accessible to rural entrepreneurs, farmer organizations, women's societies and youth groups. Furthermore, the required technical skills can be developed through short-term training programs conducted by agricultural extension services or vocational institutions.

The energy potential of rice husk significantly enhances its economic feasibility. Rice husk briquettes and pellets are increasingly used as alternative energy sources for households, small industries and institutions. They provide a cheaper and cleaner substitute for firewood, kerosene and fossil fuels. In areas where energy costs are rising and deforestation is a concern, husk-based fuel products can meet local energy demands while promoting environmental sustainability. The ash produced after combustion can also be reused, further increasing overall resource efficiency.






Rice husk is also highly feasible for agricultural and environmental applications. When processed into compost or incorporated into organic fertilizers, rice husk improves soil structure, water retention and aeration. This is especially beneficial in paddy-growing regions where soil fertility needs to be maintained for long-term productivity.



Additionally, rice husk can be used as mulch, reducing weed growth and conserving soil moisture. These applications encourage sustainable farming practices and reduce dependence on chemical fertilizers.

The market potential for husk-based products further strengthens feasibility. Locally, farmers, households and small industries can serve as immediate consumers of husk briquettes, compost and bedding materials. At a regional level, construction and manufacturing industries can utilize rice husk ash, which is rich in silica, for cement production, bricks, ceramics and insulation materials. With proper packaging, quality control and marketing strategies, these products can generate steady income streams for producers.

Environmental feasibility is another major advantage of rice husk utilization. Improper disposal of husk leads to air pollution, greenhouse gas emissions and waste accumulation. Converting husk into useful products reduces these negative impacts and supports effective waste management. The use of husk-based renewable energy contributes to climate change mitigation by lowering carbon emissions. Moreover, recycling agricultural waste into productive use promotes a circular economy, where resources are continuously reused within the local system.

Institutional and policy support plays a vital role in ensuring feasibility. Government initiatives focused on renewable energy, rural development and wasteto - wealth programs can provide financial assistance, subsidies and technical guidance. Cooperative models and public - private partnerships can help overcome challenges related to finance, technology and market access. Involvement of local authorities and development organizations can further enhance awareness and participation among communities.

Manufacturing simple value-added products using rice husk in the Navithanveli Division with extensive paddy cultivation is highly feasible from economic, technical, environmental and social perspectives. The abundance of raw material, low investment requirements, diverse product possibilities and strong market demand create favourable conditions for husk-based industries. With proper planning, skill development, and institutional support, rice husk can be transformed from an agricultural waste into a valuable resource, contributing to sustainable rural development, employment generation and environmental protection.

Compiled by:
B. Sajindren, Pandiruppu

# சட்டம் அறியாதவர்களின் வலி



*இன்று இந்த காலை வேளையில் உங்களுக்கான ஒரு சவால்:*

* சட்டத்தின் பிடியில் இருந்து உங்களையும், உங்கள் அன்புக்குரியவர்களையும் பாதுகாக்க, இந்தச் சவாலை இன்று ஏற்றுக் கொள்வோம்!

* இன்றே (மதியம் 1 மணிக்குள்) - உங்களுடைய 2 அடிப்படை சட்ட உரிமைகள் என்னவென்று (உதாரணம்: முதல் முறைப்பாடு பதிவுசெய்யும் உரிமை, அடிப்படை உரிமை) கூகிளில் தேடித் தெரிந்துகொள்ளுங்கள்.

* அந்த 2 உரிமைகளையும் உங்கள் நண்பர்கள் 2 பேருடன் WhatsApp இல் பகிர்ந்து கொள்ளுங்கள்.

சவாலை முடித்தபின், நீங்கள் என்னென்ன உரிமைகளைக் கற்றுக்கொண்டீர்கள் என்று கீழே கருத்துப் பதிவு செய்யுங்கள்! (இது ஒரு விழிப்புணர்வு மட்டுமே)

*ஒரு சட்டம் தெரியாவிட்டால் அது குற்றம் ஆகுமா...? ஆம்*

சட்டத்தை அறியாதிருப்பது சட்டத்தின்படி மன்னிக்கப்படாத குற்றம் என்று சொல்வார்கள். ஆனால், பாடசாலையிலோ கல்லூரியிலோ நமக்கு அடிப்படைச் சட்டங்களைப் பற்றி யாரும் கற்றுக்கொடுப்பதில்லை. சட்டத்தைப் பற்றிய பயத்தை விட, அறியாமையே நம்மை அதிக ஆபத்தில் ஆழ்த்துகிறது.

*'எனக்கு தெரியாது' - இது சட்டரீதியாக வாதமில்லை!*

சமூக வலைத் தளங்களில் பகிரப்படும் அவதூறு பதிவுகளுக்கு (Defamation), வெறுப்புப் பேச்சுகளுக்கு (Hate Speech) நீங்கள் 'லைக்' செய்தாலோ அல்லது 'ஷேர்' செய்தாலோ, நீங்களும் குற்றவாளியாகக் கருதப்படலாம் என்பது தெரியுமா?

*அருகில் நடக்கும் குற்றத்தைப் பார்த்தால்...!*

ஒரு விபத்தையோ அல்லது குற்றத்தையோ நீங்கள் கண்ணால் கண்டால், அது உங்கள் பிரச்சினை இல்லை என்று நீங்கள் விலகிச் செல்லும்போது, ஒரு முக்கியமான சாட்சியை சட்டம் இழந்திருக்கிறது. உங்கள் மௌனம், குற்றவாளிக்குக் கிடைத்த சாதகமாக அமைகின்றது...!

*நீங்கள் சொல்லுங்கள் உங்கள் கண்ணெதிரே ஒரு குற்றம் நடந்தால், பொலிசாரிடம் சாட்சி சொல்லப் போவீர்களா, அல்லது ஒதுங்கிக் கொள்வீர்களா?*


A) பொலீஸ் தொல்லைகளை நினைத்தால் பயமாக இருக்கிறது. ஒதுங்கிக் கொள்வேன்.

B) தைரியமாக சாட்சி சொல்வேன்.

C) நிலைமையைப் பொறுத்து முடிவெடுப்பேன்.

நீங்கள் உங்கள் அடிப்படைச் சட்ட உரிமைகள் பற்றி விழிப்புணர்வுடன் இருக்க விரும்பினால், தயவுசெய்து இந்தப் பதிவை பகிர்ந்து மற்றவர்களுக்கும் இந்த அவசரத் தேவையைக் கொண்டு செல்லுங்கள்!

சட்டத்தரணி
குமாரசிங்கம் கம்ஷன்



# புட்டினின் இந்திய வருகையும், இந்தியாவின் ராஜதந்திர நகர்வுகளும்

ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அவர்கள் இந்தியாவிற்கு சென்று ரஷ்யா திரும்பிவிட்டார். இந்தக் காலகட்டத்தில் இந்த உலகப் பரப்பில் மிக மிக விசித்திரமாக, மிக விளிப்பாக உற்றுநோக்கும் ஒரு சம்பவமாக இப்பயணத்தைப் பார்க்கலாம். இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்குமான பிணைப்பு இன்னும் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. இரு நாடுகளின் அரசியல் தலைவர்களின் முதிர்ச்சியின் வெளிப்பாடு உலகப் பரப்பிற்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் மோடி 11 வருடமாகவும், ரஷ்யாவில் புட்டின் 25 வருடங்களைத் தாண்டியும் ஆட்சி செய்கின்றார்கள். இரு நிறைகுடங்கள் சந்தித்துக் கொண்டதால் அவர்களுக்குள் என்றைக்குமே தளம்பல் எனும் நிலை உருவாக வாய்ப்புகள் இல்லை என்றே கூறலாம்.

உலகை சீனா மற்றும் அமெரிக்கா என்ற இரு துருவங்கள் இயக்கிக் கொண்டிருக்க அடுத்த நிலையில் உள்ள இந்தியாவும் ரஷ்யாவும் என்ன செய்யப்போகின்றார்கள் என்று பரவலாகப் பெரும் சந்தேகங்கள் உண்டு. இந்த வகையில் ரஷ்யாவின் அதிபர் புட்டின் அரசியல் சதுரங்க ஆட்டத்தில் சாதாரணமான, சராசரி அரசியல்வாதியல்ல, இந்த புவிசார் அரசியல் ஆட்டத்தில் உலகம் நினைக்காததை நடாத்திக்காட்டும் வல்லமை பொருந்தியவர். இதனால்தான் எவ்வாறு இதனை ஆரம்பிப்பது என்று உலகம் யோசித்துக் கொண்டிருக்கும் போது அவரது இந்திய விஜயம் முடிவானது. சர்வதேச ரீதியாகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தும் இந்திய விஜயம் அவரை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை என்றே கூறலாம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இத்தாலியில் உள்ளது. இதன் மூலம் அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய அதிபர் அவர்கள் மீதுசுமத்தப்பட்ட குற்றம் என்னவெனில் உக்ரெய்னில் இடம்பெற்றுவரும் யுத்த நடவடிக்கைகளின் போது சிறுகுழந்தைகளை உக்ரெய்னிலிருந்து ரஷ்ய அதிபரின் அதிகாரத்திற்கு

உட்பட்டவர்கள் கடத்திக்கொண்டு வந்து ரஷ்யாவில் வைத்திருக்கின்றார்கள், வளர்க்கின்றார்கள் என்பதாகும். இது போர்க்காலத்தில் இவ்வாறு நடந்துகொள்வது சர்வதேச குற்றமாகும் என்ற வகையிலேயே இந்நடவடிக்கை அவர்மீது பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் குறிப்பாக மேற்குலக நாடுகள், ஸ்கண்டினேவியா நாடுகளுக்கு ரஷ்ய அதிபர் செல்ல முடியாது. ஆனால் அமெரிக்காவுக்கு செல்லலாம். சமீபத்தில் அலாஸ்காவில் புட்டினும், ட்ரம்பும் சந்தித்திருந்தார்கள்.

மேற்கத்திய ஊடகங்கள் எல்லாம் பெரும் காட்டுக்கூச்சல் போட்டு புட்டினுக்கு பிடியாணை உள்ளது, இந்தியா ஏன் கைதுசெய்யவில்லை? என்று. ஆனால் இந்தியாவில் புட்டினுக்கு பிரமாண்டமான வரவேற்பு வழங்கப்பட்டது. இரு நாட்டு அதிபர்களும் சந்தித்துக்கொண்ட போது இருவருக்குமிடையில் 16 ஒப்பந்தங்கள் கைசாத்திடப்பட்டுவிட்டன. இதில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அவரது அரசியல் சாணக்கியத்தைப் பயன்படுத்தி அமெரிக்காவிற்கெதிரான எந்தவித வியூகங்களும் இல்லாமல் மிகச் சாதுரியமாகக் காய்களை நகர்த்தியுள்ளார். ரஷ்ய அதிபரின் பயணம் நிறைவடைந்து சென்ற பின் இந்தியாவும் அமெரிக்காவும் பாக்கிஸ்தானுக்கு அதிர்ச்சியூட்டும் விதமாக எங்கிருந்து அடி வந்தது என்று யோசிக்கும் அளவிற்கு காரியத்தை முடித்துள்ளது. அதே நேரம் சீனா, பாக்கிஸ்தான் பொருளாதார பாதையிலும் பயங்கர தடுமாற்ற நிலை உருவாகியுள்ளது. அமெரிக்கா சமீபத்தில் அறிவித்த தகவல்களால் பீஜிங்கில் பயங்கர ஸ்தம்பித நிலை, மற்றும் ராவல்பிண்டியிலும் அதே பீதியான நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த அரசியல் ஆட்டம் இந்தியாவைச் சுற்றி பல காய்நகர்த்தல்கள் மூலம் இந்தியாவின் ஸ்திரதன்மை குழப்புவதற்காக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

இது இவ்வாறு இருக்க அமெரிக்காவுடனான பல வர்த்தக ரீதியான காய்நகர்த்தல்களை இந்தியா மேற்கொண்டு வருவதையும் இங்கு நாம்குறிப்பிட வேண்டும். அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்களின் ஒரு சில அதிரடி அறிவித்தல்கள், நடவடிக்கைகள் இடம்பெற்றாலும் மோடி அவர்களின் சாணக்ய நடவடிக்கைகளால் கையாளப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ரஷ்ய அதிபரின் வருகையை அடுத்து இந்தியாவுடனான உறவுமுறை (வர்த்தக ரீதியாக) முன்னகர்த்த அமெரிக்கா முனைந்துள்ளது. அந்த வகையில் அமெரிக்ககுழு வருகை, ஏன் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வரப்போவதாக யூகங்கள் தெரிவிக்கின்றன. அந்த வகையில் சீனாவின் வளர்ச்சியைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமானால் அமெரிக்காவுக்கு இந்தியாவை விட்டால் வேறு எவரும் இல்லை என்ற நிலையும் உள்ளது.

பொதுவாக புவிசார் அரசியலில் ஏதும் தற்செயல் நிகழ்வுகள் அல்ல என்பதற்காகவும் புட்டினின் வருகையும் மோடியின் வரவேற்பும் காரண காரியங்களுடன் நிகழ்த்தப்பட்டமையாகும். மாறிவரும் உலக ஒழுங்கில் ரஷ்யாவினால் இந்தியாவிற்கான முக்கியத்துவம் எவ்வளவு என்பதை உணர்த்துகின்றது. கடந்த காலத்தில் G 08 நாடுகள் அமைப்பிலிருந்து ரஷ்யா விலக்கப்பட்டதால் அவ்வமைப்பு G 07 என்ற நிலைக்கு வந்தது. தற்போது அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மீண்டும் ரஷ்யாவை அழைத்த போது அதனை நிராகரித்த புட்டின் அவர்கள் G 07 நாடுகளின் பொருளாதாரம் சுருங்கிக் கொண்டுவருகின்றது. அதில் இணைவது சாத்தியமற்ற விடயம். நான் இந்தியா மாதிரி பொருளாதாரத்தில் வளர்ந்துவரும் நாடுகளுடனான உறவுகளைப் பலப்படுத்தவே விரும்புகின்றேன் என்று இந்தியாவில் வைத்து கூறிவிட்டார். இவ்விடத்தில் BRICS நாடுகளின் கூட்டமைப்பை வலியுறுத்தி உலகின் பொருளாதாரம் மேற்கில் இல்லை கிழக்கில்தான் உள்ளது என்பதைத் தெளிவாக கூறிவிட்டார. இதுதான் உலகின் புவிசார் அரசியல் என்பதாகும். இந்தியா உலகின் 03ஆவது பொருளாதாரம் உள்ள நாடு என்பதையும் உறுதியிட்டு கூறிவிட்டார். இது இந்தியா, ரஷ்யாவின் உறவை அடுத்தகட்டத்திற்கு அழைத்துச் செல்லும் என்பது உறுதி.

கி.யோ



# சிறப்பான வாழ்க்கையும் உள ஆரோக்கியமும் மனித வாழ்வின் இரு தூண்கள்

சிறப்பான மனித வாழ்க்கை என்பது வெறுமனே உடல் நலத்தால் மட்டுமே நிர்ணயிக்கப்படுவதில்லை. நம் மனம் அமைதியாக, தெளிவாக, சமநிலையாக இருக்கும் போது மட்டுமே எமது வாழ்க்கை உண்மையில் சிறப்பானது என்று சொல்லப்பட முடியும். இன்றைய வேகமான உலகில், தொழில்நுட்ப முன்னேற்றம், போட்டி, சமூக அழுத்தம், தனிப்பட்ட எதிர்பார்ப்புகள் ஆகியவை மனிதனை வெளிப்புற வெற்றிக்காக ஓடச் செய்கின்றன. ஆனால் இந்த ஓட்டத்தில், உள ஆரோக்கியம் என்ற மிக முக்கியமான அம்சம் பலராலும் கவனிக்கப்படாமல் போகிறது. சிறப்பான வாழ்க்கை என்பது வெறும் பொருளாதார வளம் அல்லது சமூக அந்தஸ்து அல்ல; அது மன அமைதி, உணர்ச்சிசார் சமநிலை, உறவுகளின் நலம், தன்னம்பிக்கை, நோக்கமுள்ள வாழ்வு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு ஆகும்.

## உள ஆரோக்கியம் என்றால் என்ன?

உள ஆரோக்கியம் என்பது நம் சிந்தனை, உணர்ச்சி, நடத்தை ஆகியவற்றின் சமநிலையைக் குறிக்கிறது. மன அழுத்தத்தை சமாளிக்கும் திறன், உறவுகளை ஆரோக்கியமாக பேணுதல், முடிவெடுக்கும் திறன், தன்னம்பிக்கை, தன்னுணர்வு ஆகியவை அனைத்தும் உள ஆரோக்கியத்தின் பகுதிகள். உடல் நலம் போலவே, மன நலத்திற்கும் தினசரி பராமரிப்பு தேவைப்படுகின்றது. மனம் சோர்வடையும் போது உடலும் பாதிக்கப்படும்; அதேபோல் மனம் உறுதியானால் வாழ்க்கையின் சவால்களையும் எளிதாக சமாளிக்க முடியும்.

## சிறப்பான வாழ்க்கையின் அடிப்படை அம்சங்கள்

### 1. தன்னுணர்வு

தன்னுணர்வு என்பது நம்மை நாமே புரிந்து கொள்வது. நம் பலவீனங்கள், பலங்கள், ஆசைகள், பயங்கள், விழுமியங்கள் ஆகியவற்றை அறிந்திருப்பது வாழ்க்கையை தெளிவாக நடத்த உதவுகிறது. தன்னுணர்வு உள்ளவர்கள் தங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவும், சரியான முடிவுகளை எடுக்கவும் திறன் பெற்றிருப்பார்கள்.

### 2. உறவுகளின் நலம்

மனிதன் ஒரு சமூகப் பிராணி. குடும்பம், நண்பர்கள், பணியிட உறவுகள் ஆகியவை நம் மனநிலையை நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் பெரிதும் பாதிக்கின்றன. ஆரோக்கியமான உறவுகள் நமக்கு ஆதரவு, பாதுகாப்பு, அன்பு ஆகியவற்றை வழங்குகின்றன. சிறப்பான வாழ்க்கை என்பது தனிமையில் அல்ல; உறவுகளின் அர்த்தமுள்ள இணைப்பில்தான் உள்ளது.

### 3. நோக்கமுள்ள வாழ்வு

வாழ்க்கையில் ஒரு நோக்கம் இருந்தால், ஒவ்வொரு நாளும் அர்த்தமுள்ளதாக மாறுகிறது. நோக்கம் இல்லாத வாழ்க்கை வெறுமையாக உணரப்படும். அது தொழில், கலை, சமூக சேவை, குடும்பம், கல்வி எதுவாக இருந்தாலும், நம்மை முன்னேறச்செய்யும் ஒரு நோக்கம் வாழ்க்கையைச் சிறப்பாக்குகிறது.

### 4. உடல் நலத்தின் முக்கியத்துவம்

உள ஆரோக்கியம் மற்றும் உடல் ஆரோக்கியம் ஒன்றோடொன்று இணைந்தவை. போதுமான தூக்கம், சீரான உணவு, உடற்பயிற்சி, இயற்கையோடு தொடர்பு ஆகியவை மனநலத்தை மேம்படுத்துகின்றன. உடல் சோர்வாக இருந்தால் மனமும் சோர்வடையும்.

### 5. மன அழுத்த முகாமைத்துவம்

மன அழுத்தம் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருந்தாலும், அதை சமாளிக்கும் திறன் தான் நம்மை வலுவாக்குகிறது. தியானம், யோகா, மூச்சுப்பயிற்சி, பொழுதுபோக்குகள், இயற்கை நடைப்பயிற்சி போன்றவை மன அழுத்தத்தைக் குறைக்க உதவுகின்றன.

## உள ஆரோக்கியத்தை பாதிக்கும் காரணிகள்

### 1. சமூக ஒப்பீடு

சமூக ஊடகங்கள் வளர்ந்த பிறகு, மற்றவர்களின் வாழ்க்கையைப் பார்த்து நம்மை ஒப்பிடுவது அதிகரித்துள்ளது. இது தன்னம்பிக்கையை குறைத்து மன அழுத்தத்தை அதிகரிக்கிறது. ஒவ்வொருவருக்கும் தனித்த வாழ்க்கைப் பயணம் உள்ளது என்பதை உணர்வது அவசியம்.



### 2. அதிக வேலைச்சுமை

வேலை மற்றும் வாழ்க்கை சமநிலை இல்லாத போது மனம் சோர்வடையும். ஓய்வு, பொழுதுபோக்கு, குடும்பத்துடன் செலவிடும் நேரம் ஆகியவை மனநலத்திற்கு அவசியமானவை.

### 3. தீராத உணர்ச்சிசார் காயங்கள்

குழந்தைப் பருவ அனுபவங்கள், உறவுகளில் ஏற்படும் பிரச்சினைகள், இழப்புகள் போன்றவை மனதில் ஆழமான காயங்களை ஏற்படுத்தலாம். அவற்றைப் புரிந்து கொள்ளாமல், வெளிப்படுத்தாமல் வைத்திருப்பது உள ஆரோக்கியத்தைப் பாதிக்கும்.





### 4. தனிமை

தனிமை என்பது உடல் தனிமை அல்ல, மனதின் தனிமை. பேச யாரும் இல்லாத நிலை, உணர்ச்சிகளை பகிர முடியாத நிலையை அது குறிக்கின்றது. இது மனநலத்தை மோசமாகப் பாதிக்கும்.

## உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வழிகள்

### 1. தியானம் மற்றும் மனச்சாந்தி பயிற்சிகள்

தியானம் மனதை அமைதிப்படுத்தி, சிந்தனையை தெளிவாக்குகிறது. தினமும் சில நிமிடங்கள் தியானம் செய்தாலும் மனநிலையில் பெரிய மாற்றம் ஏற்படும்.

### 2. உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல்

உணர்ச்சிகளை அடக்கி வைப்பது மன அழுத்தத்தை அதிகரிக்கும். நம்பகமான ஒருவரிடம் பேசுதல், எழுதுதல், கலை வடிவங்களில் வெளிப்படுத்துதல் போன்றவை மனநலத்திற்கு உதவுகின்றன.

### 3. நேர்மறை சிந்தனை

எதிர்மறை சிந்தனைகள் மனதைச் சோர்வடையச் செய்கின்றன. நன்றி உணர்வு, சிறிய வெற்றிகளை

கொண்டாடுதல், தன்னம்பிக்கையை வளர்த்தல் ஆகியவை மனநலத்தை மேம்படுத்தும்.

### 4. உதவி கேட்கும் துணிவு

உள ஆரோக்கியம் பாதிக்கப்பட்டால் நிபுணர்களிடம் உதவி கேட்பது பலவீனம் அல்ல; அது ஒரு வலிமை. மனநல நிபுணர்களால் நம்மை சரியான பாதைக்கு வழிநடாத்த முடியும்.

### 5. சமநிலை வாழ்க்கை

வேலை, குடும்பம், பொழுதுபோக்கு, ஓய்வு ஆகியவற்றில் சமநிலை இருந்தால் மனமும் உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

சிறப்பான வாழ்க்கை - ஒரு தனிப்பட்ட வரையறை சிறப்பான வாழ்க்கை என்பது ஒவ்வொருவருக்கும் வேறுபட்டது. சிலருக்கு அது தொழில் வெற்றி, சிலருக்கு அது குடும்ப நலம்; மற்றவர்களுக்கு அது சுதந்திரம், பயணம், கலை, ஆன்மிகம் போன்றவை. ஆனால் எந்த வரையறையாக இருந்தாலும், அதன் மையத்தில் உள ஆரோக்கியம் இருக்க வேண்டும். மனம் அமைதியாக இருந்தால் எளிய வாழ்க்கையும் சிறப்பாக மாறும் மனம் குழப்பமாக இருந்தால் மிகப் பெரிய வெற்றிகளும் வெறுமையாக உணரப்படும்.





சிறப்பான வாழ்க்கை என்பது வெளிப்புற சாதனைகளின் கூட்டுத்தொகை அல்ல, அது உள அமைதி, உணர்ச்சிசார் சமநிலை, உறவுகளின் நலம், தன்னுணர்வு, நோக்கமுள்ள வாழ்வு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு. உள ஆரோக்கியத்தை பராமரிப்பது ஒரு தொடர்ச்சியான பயணம். நம் மனதை கவனித்துக் கொள்வது, நம்மை நாமே புரிந்து கொள்வது, நம் உணர்ச்சிகளை மதிப்பது ஆகியவை வாழ்க்கையை உண்மையில் சிறப்பாக்கும். மனம் ஆரோக்கியமாக இருந்தால் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் அர்த்தமுள்ளதாக மாறும்.

B. Sajindren
Sinna Urani, Batticaloa

# eSIM: எதிர்கால இணைப்புக்கான திறவுகோல்

## ஏன் இப்போது மாற வேண்டும்?




நமது **Smartphone**-கள் மற்றும் பிற **Devices**-ல் இணைப்பை (**Connectivity**) ஏற்படுத்தப் பயன்படும் சிறிய **SIM card**கள் கடந்த சில தசாப்தங்களாகத் தரநிலையாக (**Standard**) இருந்து வருகின்றன. ஆனால், டிஜிட்டல் உலகில் (**Digital world**) இந்த **Physical SIM**-களின் தேவை மெல்ல மெல்லக் குறைந்து வருகிறது. அந்த இடத்தை நிரப்ப வந்துள்ளதே **eSIM** (**Embedded SIM**) எனப்படும் தொழில்நுட்பம் ஆகும். **eSIM** என்றால் என்ன, அது எவ்வாறு செயல்படுகிறது, மற்றும் அதனால் நமக்கு என்ன நன்மைகள் என்பதைப் பற்றி இந்தக் கட்டுரையில் விரிவாகப் பார்ப்போம்.

### *eSIM என்றால் என்ன? (What is eSIM?)*

**eSIM** என்பது **Embedded SIM**-ஐக் குறிக்கிறது. இது வழக்கமான **SIM card** போலப் பிளாஸ்டிக்கில் உருவாக்கப்பட்ட ஒரு சிறிய அட்டை அல்ல. மாறாக, இது **Smartphone**-கள், **Smartwatch-es**, **Tablets** அல்லது பிற **Devices**-களின் மதர்போர்டிலேயே (**Motherboard**) நிரந்தரமாகப் பதிக்கப்பட்ட (**embedded**) ஒரு சிறிய **Integrated chip** ஆகும்.

**Physical SIM**-ஐப் போலல்லாமல், **eSIM**-ல் பல **Carrier** புரொஃபைல்களை (**Profiles**) டிஜிட்டல் முறையில் பதிவிறக்கம் செய்து சேமித்து வைக்க முடியும். இதன் பொருள், நீங்கள் ஒரு **Carrier**-லிருந்து மற்றொரு **Carrier**-க்கு மாறும்போது, **SIM card**-ஐ மாற்ற வேண்டிய அவசியம் இல்லை (உதாரணமாக **Dialog** இலிருந்து **Mobitel** இற்கு மாறுவதற்க்கு). நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், புதிய **Carrier**-ன் புரொஃபைலை (**Profile**) உங்கள் **Device**-ல் பதிவிறக்கம் செய்வது மட்டுமே. இது, ஒரு **Hardware**-ஐச் சார்ந்திருக்கும் முறையை விடுத்து, **Software** சார்ந்த **Connectivity** தீர்வை வழங்குகிறது.

*eSIM-ஐ எப்படிப் பயன்படுத்துவது? (How to Use eSIM)*

**eSIM**-ஐ உங்கள் **Device**-ல் நிறுவுவது (**Activation**) மிகவும் எளிமையான, டிஜிட்டல் செயல்முறையாகும்.

### *1. இணக்கத்தன்மையை உறுதிசெய்தல் (Check Compatibility):*

முதலில், உங்கள் **Smartphone** அல்லது **Device** **eSIM** வசதியை ஆதரிக்கிறதா (**Support**) என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

### *2. Carrier-ஐத் தேர்ந்தெடுத்தல்:*

உங்கள் தற்போதைய **Carrier**-களான **Dialog**, **Mobitel** அல்லது **Hutch** அல்லது **eSIM** சேவைகளை வழங்கும் **Ai-ralo**, **Holafly** போன்ற **eSIM providers**-ல் உங்களுக்குத் தேவையான **Plan**-ஐ வாங்குங்கள்.

### *3. QR Code மூலம் Setup செய்தல்:*

நீங்கள் **Plan** வாங்கியதும், உங்கள் **Carrier** அல்லது **Provid-er** ஒரு **Activation Code** அல்லது **QR code**-ஐ மின்னஞ்சல் மூலம் உங்களுக்கு அனுப்புவார்கள்.

### *4. நிறுவுதல் (Installation):*

உங்கள் **Smartphone**-ன் **Settings** பகுதிக்குச் சென்று, **SIM/ Network** விருப்பத்தைத் தேர்ந்தெடுத்து, **"Add eSIM"** அல்லது **"Add Cellular Plan"** என்பதைக் கிளிக் செய்யவும். இப்போது நீங்கள் பெற்ற **QR code**-ஐ **Scan** செய்ய வேண்டும். (இரண்டாவது **Device** இருந்தால் அதில் **QR code**-ஐத் திறந்து, உங்கள் **Smartphone** மூலம் **Scan** செய்யலாம்).

### *5. நெட்வொர்க் இணைப்பு (Connect):*

சில நிமிடங்களில் **eSIM** புரொஃபைல் பதிவிறக்கம்

செய்யப்பட்டு, உங்கள் இணைப்பு (Connectivity) செயல்படத் தொடங்கிவிடும். இந்தச் செயல்முறை முழுவதுமே Digital முறையில் நடப்பதால், சில நிமிடங்கள் மட்டுமே எடுக்கும்.

## *eSIM-ன் நன்மைகள் (Benefits of eSIM)*

**eSIM** தொழில்நுட்பம் பல முக்கியமான நன்மைகளை வழங்குகிறது. இது **Consumers** மற்றும் **Device manufacturers** ஆகிய இரு தரப்பினருக்கும் உதவுகிறது:

### *1. பயணத்தின் போது எளிமை (Ease of Travel/Roaming)*

**eSIM**-ன் மிகப் பெரிய நன்மை இதுதான். வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும்போது **Physical SIM**-ஐ மாற்றவோ அல்லது உள்ளூர் **Carrier** கடைகளைத் தேடவோ வேண்டியதில்லை. நீங்கள் உட்கார்ந்த இடத்திலிருந்தே, நீங்கள் செல்லும் நாட்டுக்கான **eSIM data plan**-ஐ வாங்கி, நொடிகளில் அதைச் செயல்படுத்தி, அதிக **Roaming** கட்டணங்களைச் சேமிக்கலாம். **GSMA** புள்ளிவிவரங்களின்படி, **eSIM** பயன்படுத்துபவர்களில் **51%** பேர் இதைப் பயணத்திற்காகவே பயன்படுத்துகின்றனர்.

### *2. மேம்பட்ட பாதுகாப்பு (Enhanced Security)*

**eSIM** உங்கள் **Device**-ன் உள்ளேயே நிரந்தரமாகப் பதிக்கப்பட்டுள்ளதால், **Physical SIM**-ஐப் போல அதை எளிதில் திருடவோ அல்லது மாற்றவோ முடியாது. உங்கள் **Smartphone** தொலைந்து போனாலும், **SIM** அகற்றப்பட்டு மற்றொன்று சேர்க்கப்படுவது தடுக்கப்படுகிறது. இது உங்கள் **Security** மற்றும் **Privacy**-ஐ அதிகரிக்கிறது.

### *3. அதிக வடிவமைப்பு நெகிழ்வுத்தன்மை (Greater Design Flexibility)*

**eSIM**-க்கு **Physical SIM slot** தேவையில்லை. இதனால் **Device manufacturers** அந்த இடத்தை **Battery capacity**-ஐ அதிகரிக்கவோ அல்லது கூடுதல் **Components**-களைச் சேர்க்கவோ பயன்படுத்தலாம். மேலும், **eSIM**-ஐப் பயன்படுத்துவது நீர் புகாத (**Water Resistance**) **Device** வடிவமைப்புகளை உருவாக்குவதையும் எளிதாக்குகிறது.

### *4. Dual SIM செயல்பாடு*

நீங்கள் **eSIM** வசதியுள்ள **Smartphone** வைத்திருந்தால், ஒரு **Physical SIM** மற்றும் ஒரு **eSIM** அல்லது இரண்டு **eSIMs**-ஐ ஒரே நேரத்தில் பயன்படுத்தலாம் (**Dual SIM functionality**). இதன் மூலம், தனிப்பட்ட மற்றும் வேலைக்கான எண்களை ஒரே **Device**-ல் நிர்வகிக்கலாம்.

## *eSIM இணக்கத்தன்மை மற்றும் எதிர்காலம் (Compatibility & Future)*

**eSIM** ஒரு தசாப்தமாக இருந்தபோதிலும், அதன் **Adoption** இப்போதுதான் வேகம் பிடிக்கிறது. **Apple** நிறுவனம் அமெரிக்காவில் **eSIM-only iPhone** மாடல்களை அறிமுகப்படுத்தியது ஒரு மிகப்பெரிய திருப்புமுனையாகும் (**Catalyst**). இன்று, **Samsung, Google Pixel, Motorola** போன்ற முன்னணி **Brands** பலவும் **eSIM** வசதியுடன் **Devices**-களை வெளியிட்டு வருகின்றன. **2024**-ல், சுமார் **23% Smartphones eSIM**-ஐ ஆதரித்தன.

இலங்கையைப் பொறுத்தவரை, **Dialog, Mobitel** மற்றும் **Hutch** போன்ற உள்ளூர் **Telecom providers** இந்த மாற்றத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, **eSIM**-க்கு மாறுவதற்கான செயல்முறையை டிஜிட்டல் மயமாக்கி வருகின்றனர். எதிர்காலத்தில், **Smartwatches** மற்றும் **Tablets**-களைத் தாண்டி, **IoT (Internet of Things)** சாதனங்கள், இணைக்கப்பட்ட கார்கள் (**Connected Cars**) மற்றும் தொழில்துறை சாதனங்கள் எனப் பலவற்றிலும் **eSIM** ஒரு பொதுவான அம்சமாக மாறும். தற்போதுள்ள **Carrier** அமைப்புகளில் சில தொழில்நுட்பத் தடைகள் இருந்தாலும், உலகளாவிய **Telecom providers** இந்த மாற்றம் தவிர்க்க முடியாதது என்பதை உணர்ந்து **eSIM**-க்கு மாறுவதற்கான செயல்முறையை டிஜிட்டல் மயமாக்கி வருகின்றனர்.

**eSIM** தொழில்நுட்பம் என்பது வெறுமனே ஒரு சிறிய **SIM card**-ஐ நீக்குவது அல்ல; இது **Connectivity** மற்றும் **Device** பயன்பாட்டில் ஒரு பெரிய புரட்சியாகும். எளிமை, பாதுகாப்பு மற்றும் நெகிழ்வுத்தன்மை (**Flexibility**) ஆகியவற்றின் கலவையால், **eSIM** சந்தேகத்திற்கு இடமின்றி எதிர்காலத்தின் **Standard** ஆக மாறும். இந்த டிஜிட்டல் மாற்றத்தை எங்கள் வாசகர்களும் ஏற்றுக்கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.

*ICT UNIT*
*Divisional Secretariat*
*Navithanveli*



# The Importance of Professional Teacher Development at School Level in Sri Lanka

Education plays a vital role in shaping the social, economic and cultural development of a country. In Sri Lanka, the school education system has long been recognized as a strong foundation for national progress, with high literacy rates and widespread access to schooling. However, in a rapidly changing global and local context, the quality of education depends not only on infrastructure or curricula but largely on the competence, commitment and continuous growth of teachers. Professional teacher development at the school level is therefore essential to improve teaching quality, enhance student learning outcomes and ensure that Sri Lanka's education system remains relevant and effective.

Professional teacher development refers to the continuous process through which teachers enhance their knowledge, skills, attitudes and professional values throughout their careers. Unlike one-time training programs, it is an ongoing effort that includes workshops, mentoring, peer collaboration, reflective

practices and engagement with new educational research and technologies. At the school level, professional development becomes particularly meaningful because it is closely connected to teachers' daily classroom experiences and the specific needs of students and communities.

One of the main reasons professional teacher developments is important in Sri Lanka is the changing nature of education. The country is moving towards a more competency-based and student - centred curriculum, especially with recent educational reforms. Teachers are expected to move beyond traditional lecture - based teaching methods and adopt interactive strategies such as group work, problem-solving, project - based learning, and formative assessment. Without continuous professional development, many teachers may struggle to adapt to these changes. School - based professional development programs help teachers understand new curricula, assessment methods and teaching approaches, enabling them to implement reforms effectively in their classrooms.

Another significant factor is the diversity of learners in Sri Lankan schools. Students come from different socio-economic backgrounds, linguistic communities and learning abilities. Inclusive education has become a key priority, particularly in addressing the needs of students with disabilities, learning difficulties, and emotional or behavioural challenges. Professional development at the school level equips teachers with the skills to manage diverse classrooms, use differentiated instruction, and create inclusive learning environments. When teachers are trained to recognize and respond to individual student needs, equity and fairness in education are strengthened.

Professional teacher development also plays a crucial role in improving student achievement. Research worldwide has shown that teacher quality is one of the most influential factors affecting student learning. In Sri Lanka, disparities in student performance can often be seen between urban and rural schools, as well as between well-resourced and under-resourced institutions. School - level professional development allows teachers to share best practices, analyse student performance data and collaboratively develop strategies to address learning gaps. This collective approach helps improve teaching effectiveness and ultimately leads to better student outcomes.

The integration of technology in education further highlights the importance of continuous teacher development. The use of digital tools, online resources and blended learning methods has increased, especially after experiences such

as the COVID-19 pandemic. Many Sri Lankan teachers, particularly in rural areas, face challenges in using technology effectively due to limited training or exposure. School - based professional development programs can provide hands-on training in educational technology, helping teachers use digital platforms, multimedia resources and online assessment tools. This not only enhances teaching and learning but also prepares students with digital skills essential for the modern world.

Professional teacher development is also important for strengthening school culture and leadership. When teachers engage in continuous learning, collaboration, and reflection, a culture of professionalism and lifelong learning is fostered within the school. Teachers become more motivated, confident and committed to their profession. School-based initiatives such as peer mentoring, lesson observations and professional learning communities encourage teamwork and mutual support. In Sri Lanka, where schools often serve as key institutions within communities, strong professional cultures contribute to overall school effectiveness and positive relationships among teachers, administrators, students, and parents.

Furthermore, teacher development at the school level supports effective school management and leadership. Principals and senior teachers play a vital role in identifying professional development needs and creating opportunities for growth. When school leaders actively support teacher learning, it leads to better instructional leadership and improved decision - making. In Sri Lanka, empowering school leaders to plan and implement professional development programs ensures that training is relevant to the specific context of each school, rather than relying solely on centralized, one-size-fits-all approaches.

Another important aspect is teacher well-being and retention. Teaching is a demanding profession, and many teachers experience stress, workload pressures and limited career progression opportunities. Professional development helps teachers feel valued and supported, as it provides opportunities for personal growth, skill enhancement and career advancement. At the school level, supportive professional development can reduce burnout, increase job satisfaction, and encourage teachers to remain in the profession. This is particularly important for Sri Lanka, where maintaining a stable and experienced teaching workforce is essential for sustaining education quality.

Despite its importance, professional teacher development in Sri Lanka faces several challenges, including limited resources, time



constraints and uneven access to quality training, especially in rural and estate sector schools. Therefore, greater emphasis should be placed on school-based, cost-effective, and collaborative professional development models. Support from the Ministry of Education, provincial authorities and teacher education institutions is crucial to provide guidance, funding and monitoring. Partnerships with universities, NGOs, and international organizations can also enhance the quality and reach of professional development programs.

Professional teacher development at the school level is a cornerstone of improving education quality in Sri Lanka. It enables teachers to adapt to curriculum reforms, address diverse student needs, integrate technology and enhance teaching effectiveness. Moreover, it strengthens school culture, leadership and teacher well - being, leading to better learning environments and student outcomes. To ensure that Sri Lanka's education system continues to support national development and global competitiveness, sustained investment in school - level professional teacher development is essential. By empowering teachers as lifelong learners, schools can nurture generations of students who are knowledgeable, skilled and prepared for the challenges of the future.

B. Sajindren
Sinna Urani, Batticaloa





# வன்முறை ஒழிப்பு வாரம்

ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 25ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி வரை பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாது ஒழிக்க இந்த வன்முறை ஒழிப்பு வாரம் பல்வேறு நிகழ்வுகளுடாக அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் நடத்தி வருகின்றன.

தென் அமெரிக்காவின் டொமினிகன் குடியரசு நாடான கொலம்பியாவில் ஜனாதிபதிக்கு எதிராக கிளர்ச்சி செய்த இரு சகோதரிகள் 1961ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டனர். இந்த கொடூர சம்பவத்தை நினைவு கூரும் முகமாகவும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளை இல்லாதொழிக்கவும் வருடம் தோறும் அனுஷ்டிக்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் 1281ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பெண்களுக்கு எதிரான அனைத்து பாரபட்சங்களையும் நீக்குதல் சமவாயத்தில் 150 நாடுகள் கைச்சாத்திட்டதுடன் இது சர்வதேச பெண்கள் உரிமை மசோதா என வர்ணிக்கப்படுகின்றது.

பெண்கள் சிறுவர்களை பாதுகாப்பதற்காக பல்வேறு வேலைத் திட்டங்களும் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்றது. ஆனாலும் இலங்கையை பொறுத்தவரையில் 60 வீதமான வீட்டு வன்முறைகளும் பல வடிவங்களாகிய துஷ்பிரயோகங்களான பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் தொல்லை, வன்புணர்ச்சி, தகாத உறவுகள் ஆகிய துர்ப்பாக்கிய சம்பவங்கள் இடம்பெறுவதை சமூக ஊடகங்கள் ஊடாக நாம் கண்டுகொள்ள முடிகின்றது. இதனால் பெண்களின் மனித உரிமைகள்,



அபிவிருத்தி, சமாதானம் மற்றும் நல்வாழ்வு, வளமான குடும்ப கட்டமைப்பு போன்றவற்றுக்கு பெரும் சவாலாக உள்ளது.

கடந்த 2010 ஜனவரி தொடக்கம் 2012 ஜூன் மாதம் வரை சுமார் 2500க்கும் அதிகமான சிறுமிகள் வயது வந்த ஆண்களால் பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள் செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பதிவுகளின் வாயிலாக அறிய முடிந்தது.

2016ஆம் ஆண்டு 56 வயதுடைய தந்தை தனது 7 வயது மற்றும் 8 வயது மகள்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பான வழக்கு மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்றது. தற்போது தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் பாடசாலை செல்லும் வயதிலுள்ள சிறுமிகள் தொடர்பான பதிவுகளில் குழந்தை கர்ப்பிணிகளில், 10 வயதான சிறுமி ஒருவரும் அடங்குவதாக அதிகாரபூர்வ தகவல்களின் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளது.


கடந்த 2023ஆம் ஆண்டு 163 பாடசாலை மாணவிகள் கர்ப்பமடைந்துள்ளதுடன், 2024ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கையானது 213 வரை அதிகரித்துள்ளதாக பொலீஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக விசாரணை பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, 2024ஆம் ஆண்டு பதிவான குழந்தைத் தாய்மார்களுக்கு மத்தியில், 10 வயதான சிறுமி ஒருவரும் அடங்குவதாக பொலீஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக பிரிவின் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

எனினும், அதிகாரப்பூர்வமாக பதிவாகியுள்ள குழுந்தை தாய்மார்களை விடவும், அதிக எண்ணிக்கையிலான குழந்தைத் தாய்மார்கள் இலங்கையில் இருக்கக்கூடும் என பொலீஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக பிரிவிற்கு பொறுப்பான பிரதி பொலீஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார் என்று அறிய முடிகிறது.

சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் இடம்பெறும் போது 1929 இலக்கத்திற்கும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம் பெறும் போது 1938 எனும் அவசர தொலைபேசி இலக்கத்துக்கும் அழைப்புகளை எடுப்பதன் ஊடாக சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை குறைக்க முடியும்.

ஜெனிதா மோகன்
மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், கல்முனை





# வகுப்பறைச் சந்தங்கள்

சமூக நகர்வு என்பது, "ஒரு தனி நபர் அல்லது ஒரு குழு, ஒரு சமூக வகுப்பிலிருந்து மற்றொரு சமூக வகுப்பிற்கு நகர்வதைக் குறிக்கும்". அதனை உருவாக்கும் காரணிகளில் மிகப்பெரிய பங்கு கல்விக்கு உண்டு. எமது நாட்டைப் பொறுத்த வரை 1940 களிற்கு முன்னர் சமூகத்தில் வாழ்ந்த உயர் மட்டத்தினருக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த கல்வியை நாட்டின் மூலை முடுக்குகளிற்கெல்லாம் கொண்டு சென்று நாட்டின் சகல படிநிலை மக்களினதும் சமூக நகர்விற்கு வித்திட்டவர் இலவசக் கல்வியின் தந்தையான C.W.W. கன்னங்கரா அவர்கள். இன்று நாமும் நமது சந்ததியினரதும் நகர்விற்கு இவ் இலவசக் கல்வியே அடிப்படையாக அமைந்துள்ளது.

ஒரு நாட்டின் அல்லது ஒரு சமுதாயத்தின் அறியாமையை ஒழிக்கவல்ல ஒரு கருவி கல்வி. இதனை நெல்சன் மண்டேலா "கல்வியே உலகை மாற்றவல்ல மிக சக்தி வாய்ந்த ஆயுதம்" எனக் குறிப்பிட்டார். அவ்வகையில் கல்வியினூடாக சமூக மாற்றத்தை ஏற்படுத்தவல்ல பிரதான களமாகத் திகழ்வது பாடசாலையாகும். ஏனெனில், பாடசாலையும் சமூகமும் ஒன்றோடொன்று இணைந்து செயற்படுவதன் மூலம் அறிவார்ந்த ஆளுமைத் திறன் கொண்ட பண்பட்ட சமூகத்தை உருவாக்கமுடியும். தற்போது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் மாணவர்கள் அல்பா பரம்பரையைச் சார்ந்தவர்களாவர். இவர்களது அனைத்து செயற்பாடுகளும் டிஜிற்றல் மயம் சார்ந்ததாகவே காணப்படும்.

இம் மாணவர்களின் கைகளிலேயே நம் நாட்டின் எதிர்காலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை மாணவர்கள் எந்தளவு தூரம் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் அல்லது அதன் தார்ப்பரியத்தை எவ்வளவு தூரம் உணர்ந்துள்ளார்கள் என்பதிலேயே அச் சமூத்தின் அபிவிருத்தி தங்கியுள்ளது. தற்காலத்தைப் பொறுத்தவரை மாணவர்களிடத்தில் உண்மையான தேடலும் அறிவும் அற்றுப் போய் வீணான கேளிக்கைகளில் மாணவர்கள் அதிகமான நேரத்தைச் செலவிடும் நிலையை காணக்கூடியதாகவுள்ளது. மாணவர்கள் நாட்டிற்கும் வீட்டிற்கும் பெருமை சேர்ப்பவர்களாகத் திகழ வேண்டும் "சிறந்த 100 இளைஞர்களை என்னிடம் தாருங்கள் இந்தியாவின் தலையெழுத்தை மாற்றிக் காட்டுகிறேன்" என்ற விவேகானந்தரின் கூற்று இங்கு நினைவு கூரத்தக்கது.

இன்றைய காலத்தில் மாணவர்கள் சமுதாயத்திற்கு ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம் உண்டு. பாடசாலையும் சமூகமும் நமக்கு என்ன செய்தது? என சிந்திப்பதை விடுத்து நாம் பாடசாலைக்காகவும் நமது

சமூகத்திற்காகவும் என்ன செய்தோம் எனும் சிந்தனையை வகுத்தல் வேண்டும். இச் சிந்தனைகள் ஒழுக்கத்தை வளர்ப்பதாகவும் அமைதல் வேண்டும். இதற்காக மாணவர்கள் பாடசாலையில் ஏட்டுக்கல்வியோடு மாத்திரம் நின்றுவிடாது சமூகத்தொண்டுகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளல் அவசியமானதாகும்.

பாடசாலையில் நடைபெறும் கற்றல் செயற்பாடுகளிற்குப் புறம்பாக பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டு நிகழ்வுகள், கலை விழாக்கள், மாணவர் பாராளுமன்ற நிகழ்வுகள், சாரணீயம், தேசிய மாணவர் படையணி, செஞ்சிலுவைச் சங்கம் போன்ற துறைகளில் பங்களிப்புச் செய்வதனூடாக சமூகத் தொண்டு புரியும் மனப்பாங்கை மாணவர்கள் தம்மிடத்தில் வளர்த்துக் கொள்ளமுடியும். அது மாத்திரமன்றி எதிர்காலத்தில் வாழ்க்கை தரும் வெற்றிகளையும் தோல்விகளை முகாமைத்துவம் செய்துகொள்ளவும் மாணவர்கள் தமது பாடசாலைக் காலத்தில் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளல் அவசியமாகின்றது.

ஒரு பாடசாலையின் வெற்றி என்பது, ஒவ்வொரு வகுப்பறையின் வெற்றியிலும் தங்கியுள்ளது. வகுப்பறையின் சமூக, உளவியல், சுற்றுச் சூழலானது மாணவர்களின் கற்றல் வளர்ச்சி மற்றும் நடத்தைக்குகந்த சூழலை உருவாக்குவதோடு ஆசிரியர்- ஆசிரியர், மாணவர் - ஆசிரியர், மாணவர்- மாணவர் இடைத் தொடர்பையும் ஆற்றுப்படுத்துகின்றது. ஆசிரியர்களிற்கும் மாணவர்களிற்குமிடையிலான நட்புறவு ரீதியிலான இடைத்தொடர்பு பாடசாலைக் காலத்தோடு மாத்திரம் நின்றுவிடுவதல்ல. அதன் தொடர்ச்சி மாணவர்கள் பாடசாலையை விட்டுச் சென்ற பின்னரும் பாடசாலை மீதான பற்றின் தொடர்ச்சிக்கான இணைப்புப் பாலமாகத் திகழும்.


கல்விப் புலத்தில் மாணவர்களை சரியான முறையில் வழி நடாத்தி இம்மாணவர் சார் சமூகத்தை அபிவிருத்தி நோக்கி நகர்த்தும் பொறுப்பினை அதிபர், ஆசிரியர்கள் மாத்திரம் சுமக்க முடியாது. அதில் மிகப்பெரும் பங்கு பெற்றோருக்கும் உண்டு. ஒரு பிள்ளைக்கு கல்வியை ஊட்டும் முதல் நிறுவனம் குடும்பம் ஆகும். இங்கு பெற்றோர் கற்றலுக்கு ஏற்ற வீட்டுச் சூழலை ஏற்படுத்துதல், ஆசிரியர்களிற்கும் தமக்குமிடையில் சிறந்த உறவைப் பேணுதல், பிள்ளைகளின் கற்றல் தொடர்பாக பாடசாலையுடன் இடைத்தொடர்பைப் பேணல், இணையத்தளம் மற்றும் தொலைபேசி பாவனை தொடர்பாக வரையறுக்கப்பட்ட அளவில் பிள்ளைகளுக்கு சுதந்திரம் வழங்குதல், பிள்ளைகளின் அன்றாட நடவடிக்கைகளிலும் கல்வி தொடர்பான தேவைகளிலும் பெற்றோர்கள் கவனம் செலுத்துதல் போன்ற பல வழிகளில் தமது பிள்ளைகளை வழி நடாத்தல் வேண்டும். அவ்வாறான வழி நடாத்தலே பாடசாலைக் கல்வி முடிவடைந்த பின்னரும் பாடசாலை மீதான பற்றுத் தொடரவும், பாடசாலைக்கான தேவைகளைப் பூர்த்தி செய்து சேவைகளை வழங்கவும் அடிப்படையாக அமையும்.

பிள்ளைகளின் கல்வியில் ஆரம்பத்திலிருந்தே பெற்றோர்கள் ஈடுபாடு செலுத்துவது சிறந்த விளைவுகளை ஏற்படுத்தும். பெற்றோர்களின் பங்களிப்பு பாடசாலையின் செயல்திறனை மேம்படுத்துவதோடு மாணவர்களின் உயர்கல்விப் பெறுபேறுகளுக்கும் வழிவகுக்கும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். பாடசாலைகள் ஒரு மாணவரின் வளர்ச்சியில் ஒரு படி நிலையேயாகும். எனவே பாடசாலைகளுடன் இணைந்து பெற்றோர்கள் செயற்படுவதன் மூலம் பிள்ளையின் முழுமையான வளர்ச்சியை ஏற்படுத்தமுடியும்.

இவ்வாறு வளர்க்கப்படும் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியின் பின் பாடசாலையையும் ஆசிரியர்களையும் மதித்து பாடசாலையின் முன்னேற்றத்திற்காக உழைக்க முன்வருவர். இத்தகைய மாணவ சமூகத்தின் மூலமே நவீனத்துவத்தை நோக்கிய சமூக நகர்வு சாத்தியப்படும் என்பதில் ஐயமில்லை.

*திருமதி. சு. பிரியசாந்தினி*
*பிரதி அதிபர் (SLPS)*
*கமு/ சது/ நாவிதன்வெளி அன்னமலை ம.வி*





# அதிகரித்து வரும் வீதி விபத்துகள்! யார் காரணம்?

செல்வி. திருச்செல்வம் தர்ஷினி
பிரதேச செயலகம், நாவிதன்வெளி

சுற்றுச்சூழல் தொடர்பில் வளி மாசடைதல், நீர் மாசடைதல் போன்ற விடயங்கள் பரவலாகப் பேசப்படுகின்றன. அதையும் தாண்டி 'வீதி விபத்துகள்' தொடர்பிலான அவலங்கள் எமது செவிகளுக்கு அன்றாட செய்திகளாக மாறியுள்ளன. 'வீதி விபத்துகள்' தொடர்பில் வீதியில் நடந்து செல்லும் ஒருவருக்கு வீதியில் செல்லும் வாகனம் ஒன்றின் மூலம் ஏற்படுத்தக்கூடிய விபத்துகள், வீதியில் பயணம் செய்யும் இரு வாகனங்களுக்கு இடையிலான விபத்துகள், வீதியில் பயணம் செய்யும் ஒரு வாகனம் வேறொரு பொருளின் மீது மோதி ஏற்படுத்தக்கூடிய விபத்துகள் என தெளிவாகக் கூறலாம்.

வீதி விபத்துகளினால் வருடமொன்றிற்கு பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. அவற்றுள் இளம் வயதினரே அதிகமானோராகக் காணப்படுகின்றனர். அது மாத்திரமின்றி கைகள் அல்லது கால்கள் போன்ற உறுப்புகளை இழந்து விசேட தேவையுடையோராக உருவெடுக்கின்றனர். மூளை பாதிப்படைந்து மன நோயாளிகளாக மாறுகின்றனர். இன்னும் பலர் விபத்துகளை ஏற்படுத்திய குற்றத்திற்காக 'குற்றவாளிகளாக' சிறைவாசம் அனுபவிக்கன்றனர். இதற்கு யார் காரணம்? 'வீதி விபத்துகள்' ஏற்படுவதற்கான பொதுவான காரணங்களாக அதிகரித்து வரும் வாகனப் பயன்பாடு, அதிவேக வாகனப் பயன்பாடு, கவனக் குறைவாக வாகனத்தைச் செலுத்துதல், மது அருந்திவிட்டு வாகனத்தைச் செலுத்துதல், வாகனம் செலுத்தும் போது தொலைபேசியைப் பயன்படுத்தல், மோசமான வானிலை, முறையற்ற வீதிக் கட்டமைப்புகள், வீதி தொடர்பிலான சட்ட திட்டங்களை மீறி நடத்தல் போன்றவற்றைக் கூறலாம். வீதி விபத்துகளை முற்றாக தவிர்க்க முடியாது என்றாலும் கூட மனிதர்களாகிய நாம் நினைத்தால் முடிந்த

வரை அதனைக் குறைத்துக் கொள்ள முடியும். வாகனங்களில் பயணிப்போர் வீதிச் சமிக்ஞைகள், குறியீடுகள் என்பனவற்றைக் கவனமாக அவதானித்து செயற்படுதல் வேண்டும். பாதசாரிகள் முறையாக வீதி சட்டதிட்டங்களை பின்பற்ற வேண்டும், தமக்கு முன்னால் செல்லக்கூடிய வாகனங்களை முந்திச் செல்ல வேண்டும் என்கின்ற போட்டி மனப்பாங்கினை மாற்றிக் கொள்ள வேண்டும். குடி போதையில் வாகனம் செலுத்துவோருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளைக் கடுமையான வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும். இரவு நேரங்களில் நீண்ட தூர சேவையினை மேற்கொள்ளும் பேருந்துகளின் தொழில்நுட்ப நிலை பற்றியும், அதனைச் செலுத்தும் சாரதிகளின் உடல் நிலை பற்றியும் சரியான முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். முறையான வகையில் பயிற்சி பெறாத சாரதிகளுக்கு, இலஞ்சம் பெற்றுக்கொண்டு வாகன அனுமதிப் பத்திரத்தினை வழங்கும் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். போக்குவரத்திற்கு இடையூறாக அமைகின்ற மரங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். பாதுகாப்பற்ற மற்றும் வளைவான பாதைகளில் வாகனங்களை மிக





அவதானமான முறையில் வேகத்தினைக் குறைத்துச் செலுத்த வேண்டும். அத்துடன் இவ்வாறான இடங்களில் வீதியின் இரு பக்கங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் அமைக்கப்பட வேண்டும்.

வீதி விபத்துகளை குறைக்கும் நோக்கில் போக்குவரத்துத் துறைப் பொலிசார் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துவோர், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்துவோர், பாதுகாப்புப் பட்டி அணியாமல் வாகனங்களைச் செலுத்துவோர் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்கின்றனர். இருப்பினும் நாட்டில் ‘வீதி விபத்துகள்’ தவிர்க்க முடியாத விடயமாக மாறியுள்ளன. இது தொடர்பில் தனிநபர் ஒவ்வொருவரும் சிந்திக்க தொடங்கினால் வீதி விபத்துகள் அற்றதொரு நாட்டினை உருவாக்க முடியும்.

“வரும் முன் காப்போம்”

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...



# கிராம மக்களின் வாழ்வும் வளமும்

சா.செல்வசிகாமணி
ஓய்வுநிலை அதிபர்
மத்தியமுகாம்.

“நாவெளி” சஞ்சிகை வாசகர் உறவுகளுக்கு அடியேனின் பலகோடி வணக்கங்கள். இம்மாதம் உங்களை நாவிதன்வெளிப் பிரதேசத்தில் பொருளாதாரம், கலை, கலாசாரம், கல்வி எனப் பல்துறைகளிலும் புகழ் பெற்று விளங்குகின்ற கிராமங்களில் ஒன்றான “திருவானூர்” எனும் பெயர் கொண்ட 15 ஆம் கிராமத்திற்கு அழைத்துச்செல்கின்றேன்.

இங்கு இயற்கை அன்னையின் கொடையான வளமான நிலபுலங்கள் காணப்படுகின்றன. மக்களின் பிரதான தொழிலும் விவசாயமே. அதிலும் நெற்செய்கையில் மட்டுமல்ல மரக்கறிச் செய்கையிலும் இக்கிராம மக்கள் மிகவும் புகழ் பெற்றவர்கள். இங்குள்ள விவசாயிகள் தங்கள் மரக்கறிகளை குறிப்பாக கத்தரிக்காய்களை சாக்கு மூட்டைகளில் கட்டி மாட்டுவண்டிகளில் ஏற்றிக்கொண்டு கல்முனைச் சந்தைக்குச் செல்வார்கள் என்பது வரலாறு. இன்று வாகனம் மாட்டுவண்டி “படி” ஆக மாறி இருக்கலாம். ஆனால் பயிர்ச்செய்கை குறையவில்லை. இதைவிட விவசாயத்திற்கு வேறுசான்று தேவையில்லை. இங்கு பிரபலமான இரு பெரும் பாடசாலைகள் உள்ளன. ஒன்று கமு/சது/விவேகானந்தா மகாவித்தியாலயம் மற்றையது கமு/சது/வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயம். இந்து ஆலயங்கள் ஸ்ரீ முருகன் கோயில், கண்ணகியம்மன் கோயில், விளாவடிப்பிள்ளையார் ஆலயம் மற்றும வேப்பையடிப் பிள்ளையார் ஆலயம் என பிரபலமான நான்கு கோயில்கள் உள்ளன.

சரி இனி இக்கிராம மக்களின் கலை கலாசாரம் பற்றிப் பார்க்கலாம். அதில் நாடகக்கலை தொடர்பாகப் பார்ப்போம். அக்காலத்தில (சுமார் நாற்பத்தைந்து வருடங்களுக்குமுன்னர்) இக்கிராம மக்களுக்கு நகர்ப்புறங்களைப்போல் சினிமா திரைப்படங்களை பார்க்கும் வசதிகள் இருக்கவில்லை. அவ்வாறு திரைப்படங்களை பார்க்கவேண்டுமானால் ஆற்றைக்கடந்து கல்முனைக்கு அல்லது மட்டக்களப்பிற்கு

போக வேண்டும். அப்போது கிட்டங்கி வீதியோ, பாலமோ கிடையாது. அதனால் பணம் கொடுத்து தோணிகளில் அல்லது வள்ளங்களில்தான் போகவேண்டும். அது எல்லோராலும் முடியாது. சைக்கிள் வசதிகளுள்ள இளைஞர்களால் மட்டுமே முடியும். ஏனையவர்களுக்கு அந்த வசதிகள் கிடையாது.

அக்கால கட்டங்களில்தான் இக்கிராமங்களில் நாடகக் கலைகள் உருவானதாக கூறப்படுகின்றது. 1982ஆம் ஆண்டளவிலதான் இங்கு நாடகக் கலை “அந்தோனி மாஸ்ரர்” எனும் கலைஞர் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அவரால் ஆரம்பிக்கப்பட்ட கலைக்கழகமே “ஜீவா கலைக்கழகம்”. இக்கழகம் மூலம் புகழ்பெற்ற பல சமூக நாடகங்கள், புராண நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள் போன்றவை ஆலய விழாக்களில் அரங்கேற்றப்பட்டதாகவும் நாடகங்களுக்கு மக்களிடம் மிகுந்த வரவேற்பு காணப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இந்நாடகங்கள் வெளியூர்களில் உள்ளவர்களின் வேண்டுகோள்களின் அடிப்படையில் பெரியநீலாவணை, பாண்டிருப்பு போன்ற நகர்ப்புறங்களுக்கும் கொண்டு சென்று அரங்கேற்றப்பட்டுள்ளன. அந்நாடகங்களில் நடித்த நடிகர்களில் பிரபலமான சிலர் திரு. ஏ. இராசகோபால், மு. தவராசா, மு. புவனேஸ்வரன், எஸ். கோபால் போன்றோர் தற்போது இங்கு வாழ்கின்றனர். அவர்களில் திரு. ஏ. இராசகோபால் மற்றும் மு.தவராசா ஆகியோருக்கு கடந்த 2022ஆம் ஆண்டு நாவிதன்வெளிப் பிரதேச செயலாளர் அவர்களால் கலைஞர்களுக்கான கௌரவிப்பும் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் இளைஞர்களால் புதிய கழகம் ஒன்று உதயமானது. அமரரான திரு. த. நித்தியானந்தன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கலைக்கழகமே இளையநிலா கலைக்கழகமாகும். இக்கழகத்திலே இளவயதினரே காணப்பட்டனர். அதில் பல எழுச்சிகரமான சமூக சீர்திருத்த நாடகங்கள் போன்றவற்றோடு காதல் கீதங்களுக்கான நடனங்களும் இடம்பெற்றமை இன்றும் மக்கள் மனதில் நிழலாடுவதைக் காணலாம். அக்கால நடிகர்களில் மு. விஜயகுமரன், த. கலையரசன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்), எஸ். உதயராசா, ஆ. சௌந்தரராசா, எஸ். புவனேஸ்வரன் போன்றோர் சிலராவர்.

அவர்களில் சில கலைஞர்கள் 2020ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கௌரவிக்கப்பட்டனர். அவை தவிர இக்கிராமத்தில் சில இளைஞர்களால் “இளந்தளிர்” என்ற பெயரில் இன்னுமோர் கலைக்கழகம் உதயமானது. இது திரு. மு. மனோகரன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. திரு மனோகரன் அவர்களே கதை எழுதி அவரே முக்கிய பாத்திரத்தில் நடித்தும் நெறியாள்கை செய்தும் இருந்தார். இவர்களின் நாடகங்களிலும் புகழ்பெற்ற நாடகங்கள் பல காணப்பட்டதோடு, மக்களிடமும் அக்காலத்தில் பெரும் வரவேற்பையும் பெற்றவை என்பது மிகையல்ல. இன்றும் “இளைய நிலா” கலைக் கழகம் மூலம் நாடகங்கள் மட்டுமன்றி பாடசாலை மாணவர்களுக்கான சமய அறிவுப்போட்டிகள், விவாதப் போட்டிகள் போன்றவை நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இக்கிராமத்திலே தோன்றிய இந்நாடகக் கலைகள் வெறுமனே மக்களுக்கு பொழுது போக்கை வழங்கியது மட்டுமன்றி மக்கள் வாழ்விலும் மகிழ்ச்சியையும் சமூகத்திற்கு நல்வழிகளையும் எடுத்துக்காட்டின என்பது யாரும் மறுக்கமுடியாத உண்மையாகும். அதனால்தான் அன்றைய எமது கிராம மக்கள் மிகவும் கட்டுப்பாடான கலாசாரங்களையும் விழுமியங்களையும் பின்பற்றிய உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்து வந்தனர் என்பது பெருமையானதாகும். அது இன்றைய தொலைக்காட்சி நாடகங்களால் சிதைவடையும் நிலையை நோக்கிச் சென்று கொண்டிருப்பது கவலையளிக்கின்றது.

தொடரும்...



# டிட்வா (Ditwah) பேரழிவின் பின்:

# மீண்டெழுவோம் ஆரோக்கியமாக!

2025 நவம்பர் 28 அன்று இலங்கையைத் தாக்கிய ‘டிட்வா’ (Ditwah) சூறாவளி மற்றும் அதனைத் தொடர்ந்த பெருவெள்ளம், நம் நாட்டின் வரலாற்றில் 2004 சுனாமிப் பேரழிவிற்குப் பிறகு ஏற்பட்ட மிகக் கொடிய இயற்கை அனர்த்தமாகப் பதிவாகியுள்ளது. 2004 சுனாமி ஈடுசெய்ய முடியாத உயிரிழப்புகளை ஏற்படுத்தியிருந்தது. அதேபோல், இந்த டிட்வா சூறாவளியானது நாட்டின் 25 மாவட்டங்களையும் பாதிப்புக்குள்ளாக்கி, சுகாதாரக் கட்டமைப்பிற்கு பெரும் சவாலை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதும் நாட்டின் பல பகுதிகளில் மழை தொடர்ந்து பெய்து வருவதால், வெள்ள நீர் வடியும் காலப்பகுதியில் பரவக்கூடிய நோய்கள் குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருப்பது அவசியமாகும். பேரழிவு நிகழ்ந்த உடனடித் தாக்கங்களை விட, அதன் பின்னர் பரவக்கூடிய நோய்களே (Post-disaster epidemics) பொதுச் சுகாதாரத் துறைக்கு பெரும் சவாலாக அமைகின்றன. இக்கட்டுரை, அனர்த்தத்திற்குப் பிந்திய சுகாதாரப் பாதுகாப்பு குறித்து நீங்கள் பின்பற்ற வேண்டிய அவசியமான வழிகாட்டல்களை வழங்குகிறது.

### 1. *தற்போதைய நிலைமை: ஒரு பார்வை:*

அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC) மற்றும் சர்வதேச இடம்பெயர்வு அமைப்பு (IOM-DTM) ஆகியவற்றின் டிசம்பர் 12, 2025 வரையான உத்தியோகபூர்வ தரவுகளின்படி:

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 8 சதவீதமானோர், அதாவது 1,739,923 நபர்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 640 உயிரிழப்புகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், 211 நபர்கள் காணாமல் போயுள்ளனர்.

* சுமார் 239,493 நபர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். தற்போது 847 பாதுகாப்பு மையங்கள் இயங்கி வருகின்றன.

* பல வைத்தியசாலைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால், மருந்து விநியோகத்தில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

### 2. *தொடர் சிகிச்சை (Clinic) மற்றும் சுகாதார ஆவணங்கள்*

வெள்ளத்தினால் உங்கள் வழமையான மருத்துவச் சேவைகள் தடைப்பட்டிருக்கலாம், ஆனால் சிகிச்சையைத் தொடர்வது மிக முக்கியம்.

நீரிழிவு, இரத்த அழுத்தம், இதய நோய் போன்றவற்றுக்காக நீங்கள் வழமையாக உட்கொள்ளும் மருந்துகளை நிறுத்த வேண்டாம். மருந்துகள் சேதமடைந்தால் உடனடியாக அருகிலுள்ள மருத்துவ முகாம் அல்லது அரச வைத்தியசாலையை அணுகுங்கள்.

உங்கள் சிறுவர் வளர்ச்சிப் பதிவு அட்டை (CHDR) அல்லது கர்ப்பிணிப் பதிவு அட்டை தொலைந்திருந்தால் அல்லது சேதமடைந்திருந்தால், உடனடியாக உங்கள் பிரதேச குடும்ப நல உத்தியோகத்தரை (PHM) அல்லது சுகாதார மருத்துவ அதிகாரி (MOH) அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

### 3. *பாதுகாப்பான குடிநீர் மற்றும் மலசலகூட சுகாதாரம்*

வெள்ளத்தின் போது கிணறுகள் மற்றும் குழாய் நீர் விநியோகக் கட்டமைப்புகள் அசுத்தமடைவது இயல்பானது. ‘பாதுகாப்பானது’ என்று உறுதிப்படுத்தப்படாத எந்த நீரையும் குடிக்க வேண்டாம். தண்ணீரை நன்கு கொதிக்க வைத்து (குறைந்தது ஒரு நிமிடம் கொதிக்க வேண்டும்) ஆறவைத்து குடிக்கவும். கிணறுகள் வெள்ள நீரில் மூழ்கியிருந்தால், பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் (PHI) அறிவுரைப்படி ‘சூப்பர் குளோரினேஷன்’ (Super chlorination) செய்த பின்னரே பயன்படுத்த வேண்டும். வெள்ள நீர் வடிந்த பின் மலசலகூடங்களை கிருமிநாசினி இட்டு சுத்தம் செய்யவும். திறந்த வெளியில் மலம் கழிப்பதைத் தவிர்க்கவும், இது காலரா மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற நோய்களைத் தீவிரப்படுத்தும்

## 4. எலிக்காய்ச்சல் (Leptospirosis) அபாயம்

* வெள்ள நீரில் எலிகளின் சிறுநீர் கலப்பதால் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகம் உள்ளது.

*வெள்ள நீரில் விளையாடுவதையோ, நடப்பதையோ தவிர்க்கவும்.

* வயல் வேலைகள் அல்லது சுத்திகரிப்பு பணிகளில் ஈடுபடுவோர் நீண்ட காலணிகள் (Boots) மற்றும் கையுறைகளை அணியவும்.

* உடலில் காயங்கள் இருந்தால் நீர் புகாதவாறு மூடி வைக்கவும். அறிகுறிகள்: கடும் காய்ச்சல், தசை வலி (குறிப்பாக காலின் பின்பகுதி), கண்கள் சிவத்தல்.

* சுகாதார அமைச்சின் வழிகாட்டலின்படி, வெள்ள நீரில் இறங்குபவர்கள் அல்லது மீட்புப் பணிகளில் ஈடுபடுவோர் டொக்ஸிசைக்ளின் 200mg (Doxycycline) எனும் ஒரு தடுப்பு மாத்திரையை வாரம் ஒருமுறை உட்கொள்ள வேண்டும்.

*குறிப்பு:* இதனை உட்கொள்ளும் முன் உங்கள் பகுதி PHI அல்லது மருத்துவரிடம் ஆலோசனை பெறவும். 12 வயதிற்குட்பட்ட சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இது வழங்கப்படுவதில்லை.

## 5. உணவு மற்றும் நீர் மூலம் பரவும் நோய்கள்

* வயிற்றுப்போக்கு மற்றும் ஹெபடைடிஸ் A போன்றவை அசுத்தமான உணவு மற்றும் நீர் மூலம் பரவுகின்றன.

* சமைத்த உணவுகளை மூடி வைக்கவும். ஈக்கள் மொய்த்த உணவுகளை உட்கொள்ள வேண்டாம்.

* உணவு உட்கொள்ளும் முன்பும், மலசலகூடத்தைப் பயன்படுத்திய பின்பும் கைகளை சவர்க்காரம் இட்டு நன்கு கழுவவும்.

* வயிற்றுப்போக்கு ஏற்பட்டால், உடனடியாக ஜீவனி (ORS) மற்றும் அதிகளவு திரவ உணவுகளை (கஞ்சி, இளநீர்) உட்கொள்ளவும். நிலைமை மோசமானால் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லவும்.

## 6. கண் மற்றும் தோல் நோய்கள்

வெள்ள நீர் மற்றும் சேற்றுடன் நீண்ட நேரம் தொடர்பில் இருப்பது பல்வேறு தோல் பாதிப்புகளை ஏற்படுத்தும். வெள்ள நீரில் நனைந்த பின் சுத்தமான நீரில் உடலைக் கழுவவும். பூஞ்சை தொற்று (Fungal infections) ஏற்பட்டால் சுய மருத்துவம் செய்யாமல் மருத்துவரை அணுகவும். கண்கள் சிவத்தல், அரிப்பு அல்லது நீர் வடிதல் ஏற்பட்டால் பிறருடன் தொடர்பைத் தவிர்த்து, கண்களைத் தேய்க்காமல் சுத்தமான நீரால் கழுவவும்.

## 7. உள ஆரோக்கியம்

* பேரழிவுகள் உடலை மட்டுமல்ல, மனதையும் சிதைக்கின்றன. உடைமைகளை இழந்த கவலை, எதிர்காலம் பற்றிய அச்சம் ஆகியவை மன அழுத்தத்தை உருவாக்கலாம்.

* பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் உணர்வுகளை நண்பர்கள் அல்லது உறவினர்களுடன் பகிர்ந்து கொள்வது அவசியம்.

* குழந்தைகள் இக்காலகட்டத்தில் அதிக பயத்துடன் இருக்கலாம். அவர்களைப் பாதுகாப்பாக உணர வைப்பது பெரியவர்களின் கடமை.

* தூக்கமின்மை, அதிகப்படியான பயம் அல்லது தற்கொலை எண்ணங்கள் தோன்றினால், 1926 எனும் தேசிய மனநல உதவி எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

டிட்வா சூறாவளி ஏற்படுத்திய வடுக்கள் மறைய காலம் எடுக்கும். ஆனால், முறையான சுகாதாரப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதன் மூலம் தேவையற்ற நோய் பரவலையும் நாம் தடுக்க முடியும். உங்கள் பகுதியில் உள்ள சுகாதார அதிகாரிகள் வழங்கும் ஆலோசனைகளை முழுமையாகப் பின்பற்றுங்கள். நாம் ஒன்றிணைந்து, ஆரோக்கியமானதொரு எதிர்காலத்தை மீண்டும் கட்டியெழுப்புவோம். மேலதிக விபரங்களுக்கு உங்கள் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி (MOH) அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்

**Compiled by:**
**Dr MBM. SILMY**
**(MBBS, MSLMA, MSLAGM)**
**MOIC/PMCU MAVADIPALLI**



# எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வும், அதிகரித்துவரும் எயிட்ஸ் தொற்றை இலங்கையில் முடிவுக்கு கொண்டுவருதலும்

உலகம் தற்போது 37வது உலக எயிட்ஸ் தினத்தை 2025 மார்கழி 01ஆம் திகதி கொண்டாடும் வேளையில் HIV யினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுடன் "சவால்களை சமாளித்து எயிட்சை ஒழிக்க புதிய வழிகளில் போராடுதல்" எனும் கருப்பொருளை நிலைநிறுத்தி விழிப்புணர்வூட்டப்படுகின்றது. உலக எயிட்ஸ் தினத்தை நினைவுகூரும் வகையில் சுகாதார அமைச்சின், தேசிய பாலியல்நோய்/ எயிட்ஸ் கட்டுப்பாட்டு திட்டமானது HIV பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பொதுசுகாதார அச்சுறுத்தலான எயிட்சை கட்டுப்பாட்டுக்குள்/ முடிவுக்கு கொண்டுவருவதற்கும் பொதுவான இலக்கை நோக்கி சமூகங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பை வழங்க இலங்கைத்தீவு முழுவதும் பலதரப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

## இலங்கையில் HIV தொற்று நிலவரங்கள்

01. இறுதியாக பெறப்பட்ட மதிப்பீட்டின்படி இலங்கையில் சுமார் 5700 பேர் HIV தொற்றாளர்கள் வாழ்கின்றனர். வயது வந்த தொற்றாளர்கள் 0.1% இற்கும் குறைவாகவே உள்ளனர்.

02. உலகில் HIV தொற்றாளர்கள் 2010 முதல் 2024 வரையான காலப்பகுதியில் 40% ஆக குறைந்துள்ளன. இருந்தாலும் உலகில் பல்வேறு பகுதிகளில் மாறுபட்ட சரிவு விகிதங்கள் காணப்படுகின்றன. ஆனால் இலங்கையில் மதிப்பிடப்பட்ட புதிய HIV தொற்றாளர்கள் (48%) அதிகரித்துவரும் போக்கானது இதன் அதிகரிப்பை குறித்துநிற்கின்றது.

03. 1987 முதல் 2024 வரை பதிவான HIV நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை இலங்கையில் படிப்படியாக அதிகரித்து வருகிறது. 2024இல் மட்டும் மொத்தம் 824 புதிய HIV நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

04. பெரும்பாலும் 15 வயதிற்கு மேற்பட்ட ஆண்களிடையே HIV தொற்று அதிகரித்துள்ளது.

05. இலங்கையில் ஆண்களுக்கு இடையிலான HIV பாதிப்புக்களின் அளவு அதிகமாக இருப்பது மற்றைய நாடுகள் போன்றே முதன்மையான பரவல் வழி ஆண்களிடையிலான பாலியல் தொடர்பாகும்.

06. HIV தொற்று பரிசோதனை சேவைகளின் விரிவாக்கம் நாடுமுழுவதும் உள்ள STD கிளினிக்குகள், NGOக்கள் மற்றும் இணையவழி (Online) மூலமாக HIV சுய பரிசோதனையும் செய்துபார்க்கலாம். இதன் மூலம் மக்கள் இலகுவாக வாய்வழித்திரவத்தை பயன்படுத்தி பரிசோதனை செய்துகொள்ளலாம். இலகுவான வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் வீட்டிலேயே சில நிமிடங்களில் சோதனை முடிவுகளை பெற்றுக்கொள்ளவும் முடியும்.

மேலும். NSACP ஆனது "know4sure.lk என்ற இணையதளத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இதன் மூலம் HIV தொடர்பான சரியான தகவல்களை பெறவும், சுய HIV பரிசோதனை கருவியை Online இல் ஓடர் செய்து வீட்டிலிருந்தே பரிசோதனையினை மேற்கொள்ளவும், STD கிளினிக்கில் நியமனத்தை முற்பதிவு செய்யவும் முடியும்.

## *HIV தொற்று தடுப்பு உத்திகள்*

**01. எயிட்ஸ் தின நடைபயணம்**

HIV மூலம் பாதிக்கப்பட்டவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) மற்றும் சமூக அமைப்புக்கள் (CBOs), இலங்கையில் எயிட்ஸ் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு சகல தரப்பு பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் NSACPஆல் ஒழுங்கு செய்யப்பட்டது.

**02. HIV பல்சோதனை இலக்கு திட்டங்கள்**

அக்டோபர் 19 முதல் நவம்பர் 24 வரை மற்றும் டிசம்பர் 1ஆந் திகதி அன்றும் கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களை இலக்காக கொண்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

**03. பதாதைகள் மற்றும் பிரசுரங்கள்**

இலங்கை முழுவதும் HIV பரிசோதனை, சிகிச்சை, பராமரிப்பு சோதனை, பிரசாரம் செய்தல். 2030ஆண்டிற்குள் எயிட்சை முடிவுக்கு கொண்டுவரும் இலக்கை அடையவும் நடவடிக்கை மேற்கொள்ளல்.

**04. சமூக, ஊடக பிரச்சாரம்**

2025 நவம்பர் 28 முதல் டிசம்பர் 31 வரை know4sure.lk தளங்கள் (YouTube, Instagram, Twitter) வழியாக HIV பரிசோதனை, தடுப்பு, சிகிச்சை மற்றும் சுய பரிசோதனை முறைகள் பிரச்சாரம் செய்யப்படுதல்.

## *இணை அனுசரணை :*

Global Fund, Family Planning Association

இலங்கையில் தொற்றுக்குள்ளானவர்களில் தரவுகளை ஆய்வு செய்யும் போது சில முக்கிய உண்மைகள் வெளிப்படுகின்றன. இதனடிப்படையில் HIV தொற்று பாதிப்பில் ஆண்களே முன்னிலையில் உள்ளதாகவும் ஆண், பெண் விகிதாசாரம் 6:1 ஆக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் 15 முதல் 24 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 68 ஆண்களும் 03 பெண்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

*கி. யோகலிங்கம் - பி. மு. சே. உத்தியோகத்தர்*
*எம். ஐ. எம். அஸாப் - மு. சே. உத்தியோகத்தர்*

# தூய இலங்கை




இந்து சமுத்திரத்தின் மத்தியிலே
ஈழமென்னும் பெயரிலே
நாற்புறமும் கடலிலே
எழில் கொஞ்சும் இயற்கையிலே - பிறந்த
நாடையா இலங்கை நாடு.

தளிர் இலைகள் பசேலென
குளிர் தென்றல் சில்லென
ஓடும் அருவியப்பு சலசலவென
பாடும் பறவையோசை இனிதென - தவழ்கின்ற
மண்ணிலே தவிக்கின்ற இன்னல்கள்.

சாதி மத வேறுபாடு
போதைப் பொருள் பயன்பாடு
சுற்றுச் சூழல் மாசுபாடு
சட்ட விரோத செயற்பாடு - என
எத்தனையோ குறைபாடு.

சாதி மத வேறுபாடு - இதுவே
மாந்தர் குல குறைபாடு
உணர்வுகளுக்கிடையில் வேறுபாடு இல்லை
எதற்கு இந்த சாதிமத தொல்லை - இதனை
உணர்ந்திடுவோம் இனிதென வாழ்ந்திடுவோம்.

போதைப் பொருளின் பாவனை - அது
கொடிய அரக்கனின் சோதனை
நாட்டிற்கும் கேடு - போதை
வீட்டிற்கும் கேடு - போதை
தவிர்ப்போம் இலையாய் துளிர்ப்போம்.

சுற்றுச் சூழல் மாசுபாடு - இது
தேசத்திற்கே குறைபாடு - சூழல்
இறைவன் அளித்த அருங்கொடை - அதை
இழிவாக அழித்தல் பெரும்பிழை - சூழல்
காப்போம் நோய்கள் தவிர்ப்போம்.

சட்டத்தை வழங்குவது நன்மைக்கே - இந்த
கட்டத்தை மீறுவது குற்றத்திற்கே - இதனை
உணர்ந்தால் கோடி நன்மை - இதுவே
நிரந்தர உண்மை - சட்டமென்பது
கட்டம் காத்து சிட்டாய்ப் பறந்திடுவோம்.

வந்தது புதிய அரசாங்கமென்று
வாசிப்பது இனிய அரசாட்சியென்று
வளர்த்தது சிறிய வேலைத்திட்டமென்று
வளர்கிறது தூய இலங்கையென்று -
வளரப்போகிறது
அழகிய தேசமொன்று.

அங்கும் பரவுகறது தூய இலங்கை
இங்கும் செழிக்கின்றது மாய இலங்கை
எங்கும் மாறுகின்றது அழகிய இலங்கை
நாங்கள் வாழ்வது இனிய இலங்கை -
வாழப்போகிறது
இளைஞர் சமுதாயம் இனிதென விளங்கும்
இலங்கையிலே.

தூய இலங்கை மாயமாய் வளர
தூர நோக்கு நீளமாய் இருக்க
குறைகளை நீக்கிடுவோம்
நிறைகளோடு வாழ்ந்திடுவோம் - தூய
தேசம் உருவாக்கி இனிதென வாழ்ந்திடுவொம்.

*கோசலன் சலூஜா,*
*கமு/ சது/ கலைமகள் வித்தியாலயம்,*
*வேப்பையடி, அன்னமலை - 02.*

# சுண்டைக்காய் வத்தல் குழம்பு



## தேவையானவை:

- சுண்டைக்காய் வத்தல் - கால்கப்
- உளுத்தம்பருப்பு - 2 டீஸ்பூன்
- மிளகு - ஒரு டீஸ்பூன்
- காய்ந்த மிளகாய் - 5
- தேங்காய் துருவல் - கால் கப்
- புளி - 2 டீஸ்பூன்
- மஞ்சள்தூள் - 1/2 டீஸ்பூன்
- பெருங்காயத்தூள் - 1/2 டீஸ்பூன்
- வெல்லம் - கொட்டைப்பாக்கு அளவு
- கறிவேப்பிலை, கடுகு - சிறிதளவு
- நல்லெண்ணய் - ஒரு டீஸ்பூன்
- உப்பு தேவையான அளவு



## செய்முறை:

கடாயில் சிறிது எண்ணெய் விட்டு உளுத்தம் பருப்பு, மிளகு, காய்ந்த மிளகாயை வறுத்து தேங்காய் துருவல், கறிவேப்பிலை சேர்த்து அரைக்கவும். கடாயில் எண்ணெய் விட்டு கடுகு தாளித்து, அதில் சுண்டைக்காய் வத்தலைப் போட்டுச் சிவக்க வறுக்கவும். புளியை ஒன்றரை கப் நீரில் கரைத்து வடிகட்டி அதில் ஊற்றி உப்பு, மஞ்சள்தூள் சேர்க்கவும். அது நன்றாகக் கொதித்ததும் அரைத்த மசாலாவைச் சேர்த்து வெல்லம், பெருங்காயத்தூள் சேர்த்து நன்றாக கொதிக்க விடவும்.எண்ணெய் பிரிந்து வரும்போது இறக்கவும். சுண்டைக் காய் வத்தலில் ஏற்கெனவே உப்பு இருக்கும் என்பதால் குழம்பில் தேவைக்கு ஏற்ப உப்பு சேர்ப்பது நல்லது.

-இ.றூபிகா

# சிரேஷ்ட கூத்துக் கலைஞர் இன்னாசி சாலமோன் அவர்களின் மரணம் ஈடுசெய்ய முடியாதது



அம்பாறை மாவட்டத்தில், நாவிதன்வெளி பிரதேசத்தில், சொறிக்கல்முனை - 03 கிராமத்தில், வைத்தி இன்னாசி, ஹென்றி அந்தோணியம்மா தம்பதியினருக்கு ஐந்தாவது மகனாக 1950ஆம் ஆண்டு வைகாசி மாதம் 26ஆம் திகதி பிறந்தவர்.

ரோமன் கத்தோலிக்க மதத்தை சேர்ந்த இவர், ஆரம்ப கல்வியினை திருச்சிலுவை வித்தியாலயத்திலே கற்றார். தனது குடும்ப நிலையின் காரணமாகக் கல்வியை இடைநிறுத்தி விட்டு தந்தைக்கு உதவியாக இருந்தார். தனது தந்தை நாட்டு கூத்துப் பாடல்களை இயற்றி, அவற்றை பயிற்றுவித்து அரங்கேற்றம் செய்வதில் வல்லவராக இருந்ததால், தானும் தன் தந்தையிடம் அனுமதி கேட்டு, தந்தையிடமே பாடல்களைக் கேட்டு வாய் மொழியாக மனனம் செய்து கதாபாத்திரங்களில் பங்கேற்று நடித்து வந்தார். சிறு வயதிலிருந்தே கலைத் துறையில் மிகவும் ஆர்வமுடையவர். வாய் மொழியாக கேட்ட பாடல்களை மனனம் செய்து பாடுவதில் திறமையுடையவர். பல நாட்டு கூத்துக்களில் நடித்தாலும் இவரது மனதை தொட்டது "சத்தியநாதன்" நாட்டு கூத்தேயாகும்.

குடும்ப வாழ்வில் இன்னாசி, கவிதா என்பவரை திருமணம் செய்து நான்கு பிள்ளைகளுக்கு தந்தையுமாவார். இவரது பிரதான தொழில் விவசாயம், வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை, கால் நடை வளர்ப்பு போன்றதாகும். தனது தொழிலுக்காக மாட்டுவண்டியில் பயணிக்கும் போதெல்லாம் நாட்டுக் கூத்துப் பாடல்களே இவரது வாயால் ஒலிக்கும். வயல்களை உழுது கொண்டிருக்கும் போது கூத்துப் பாடல்களைப்

பாடிக் கொண்டிருப்பார். கலையை நேசித்தது போல் தன்னுடைய மாடுகளையும் நேசித்தார். தனது தந்தையின் மறைவிற்கு பின் நாட்டுக் கூத்து அரங்கேற்றம் செய்யவில்லை. மீண்டும் இவற்றை முன்னெடுக்க ஆர்வம் கொண்டு ஏனைய கலைஞர்களுடன் கலந்துரையாடி தனது வீட்டிலேயே மீண்டும் பயிற்சிகளை வழங்கி 2009 ஆம் ஆண்டு அரங்கேற்றம் செய்ய நினைத்த போது பொருளாதார பிரச்சினையினால் அவை நிறுத்தப்பட்டது. இவர் ஆலயங்களில் நடைபெறும் நிகழ்வுகளிலும் நடிப்பவர். ஆலய வேலைகளிலும் ஈடுபாடு கொண்டவர். அருட் தந்தைகளுடன் நெருங்கிப் பேசி அரங்கேற்றம் செய்ய உதவி புரியும்படியும் கேட்பார். இதன்படி அருட்பணி யேசுதாசன் அவர்களின் உதவியினால் 2013ஆம் ஆண்டு நாவிதன்வெளி - சொறிக்கல்முனை திருத்தலத்தில் "சத்தியநாதன் கூத்து" அரங்கேற்றம் செய்யப்பட்டு, கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2018ஆம் ஆண்டு "கலைஞர் சுவதம்" விருது இவருக்கு வழங்கப்பட்டது. நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் நடைபெறும் கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றி கலைத்துறையை ஊக்குவித்தவர். அந்தோனியார் கலை மன்றத்தோடு இணைந்து பயணித்த இன்னாசி அவர்கள், 2023ஆம் ஆண்டு கலை மன்றத்தின் விழாவை நடாத்த அதிக பங்களிப்பைச் செய்ததுடன் கூத்துக் கலையிலும் திறமையை வெளிப்படுத்தினார். கலைஞர்களோடு உரையாடும் போதெல்லாம் "நம் கலையை மேலும் வளர்க்க வேண்டும்" என கேட்டுக் கொள்வார்.

கலாசார உத்தியோகத்தர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்ட இவர், சொறிக்கல்முனையில் கூத்துப் பாட்டிசைக்கும் கலைக் குயிலாகவும் திகழ்ந்தார். ஊரை பகைக்காத உத்தமனாகவும், எல்லோரோடும் அன்பாக பேசும் ஒருவராகவும் திகழ்ந்தார்.

சிறு பிள்ளைகளைச் சந்திக்கும் போதும், பெரியவர்களுடன் கலந்துரையாடும் போதும் நகைச்சுவையாக கூத்துப் பாடல்களைப் பாடுபவர். தனது கலை வளர்ச்சியடைய தனது மகளையும் ஊக்கப்படுத்தினார். அந்தோனியார் கலை மன்றத்திலே கலைஞராக இருந்து பல நிகழ்வுகளில் பங்கேற்ற இவர், தனது 75ஆவது வயதில் கடந்த நவம்பர் மாதம் 5ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

இவரால் பேணப்பட்டு வந்த இந்தக் கூத்துக் கலையினை மேலும் பரவலடையச் செய்வதற்கு அவரது குடும்பத்தினரோடு நாவெளி படலையைத் தேடி குழுவினரும் பயணிக்கின்றனர்.

தொகுப்பு:
ஏ.எல்.எம். ஷினாஸ்,
என்.நீலேந்திரன், ஏ.ஏ.அஸீம்

නාවැලි

# நாவெளி NAAVELI

பிரதேச செயலக மாதாந்த இலத்திரனியல் சஞ்சிகை

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினால் மாதாந்தம் தொடர்ச்சியாக வெளிவருகின்ற நாவெளி மின்னிதழுக்கு ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

### பின்வரும் தலைப்புகளில் ஆக்கங்களை அனுப்ப முடியும்.

- வாழ்வியல் தத்துவம்
- பொருண்மியம்
- உலக அரசியல்
- கதைச் சாளரம் (சிறுகதை, மர்மத் தொடர்)
- அறிவுக்களஞ்சியம்
- மாணவர் அரங்கம்
- கல்வி, சட்டம் கற்போம்
- மனிதம் அல்லது மானுடம்
- விளையாட்டும் தேகாரோக்கியமும்
- கதம்பம் - (சமையல் கலை / அழகும் ஆரோக்கியமும் / வீட்டுக் குறிப்பு )
- பெண்ணியம்
- மருத்துவமும் நாமும்
- கவிதைச்சாரல் (மரபுக்கவிதை, நவீன கவிதை, ஹைக்கூ )

### கவனிக்க வேண்டியவை:

- ஒரு ஆக்கம் வேறு ஏதேனும் பிரசுரிப்பில் வந்திருந்தால், அதன் மறு பிரசுரம் என்பதை தாங்கள் உறுதிப் படுத்தல்.
- தகவலுக்கான பொறுப்பினை தாங்கள் எடுத்தல்.
- உத்தியோகப் பற்றற்ற, சந்தேகத்திற்கு இடமான தகவல் என நீங்கள் கருத்துமிடத்து, அதனை எமக்கு அனுப்பாதிருத்தல்.
- ஆக்கமும், ஆக்கம் தருபவர் பெயரும், தங்களிடம் எதிர் பார்க்கப்படும்.
- சஞ்சிகைக் குழுவின் இறுதித் தீர்மானத்தின் படி ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

தங்கள் ஆக்கங்களின் மென்பிரதிகளை (Soft Copy)

▶ 0755424333 எனும் WhatsApp இலக்கத்திற்கு

▶ it@navithanveli.ds.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு

ஒவ்வொரு மாதமும் 15ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க முடியும்.

உங்கள் ஆதரவை எதிர்பார்த்து...
என்றும் அன்புடன்,
மின்னிதழ் குழு.